இவிஆகொச இன் வருடாந்த அறிக்கை - 2022



இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை
இலக்கம் 114/9,விஜேராம மாவத்தை
கொழும்பு 7,
ஸ்ரீ லங்கா

உள்ளடக்கம்

தூரநோக்கு....3

இலக்குகள்....3

குறிக்கோள்கள்....4

சபையின் உறுப்பினர்கள் பற்றிய விபரம் - 2022....5

சபையின் கட்டாயத் தொழிற்பாடுகள்....8

தலைவரின் செய்தி....10

செயலாளரின் செய்தி....12

சபையின் செயற்பாடுகள் - 2022....14

விவசாய ஆராய்ச்சி முகாமைத்துவம்....28

விஞ்ஞானிகளை ஊக்குவித்தல்....30

நிதி அளித்தல்....34

மனித வளங்கள் அபிவிருத்தி....35

நிலையான அபிவிருத்தி இலக்குகளை(SDG)அடைதல் - 2022....37

இ வி ஆ கொ ச இன் பதவியணி....38

நன்றியும் பாராட்டும்....40

இறுதிக் கணக்குகள்....41

கணக்குகளின் சுருக்க அறிக்கை....68

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டக் குறிப்புகள்....69

கணக்காய்வு அறிக்கை....72

கணக்காய்வு அறிக்கைக்கான பதில்....80

வரடாந்த அறிக்கக சுருக்க-....83

தூரநோக்கு

இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியை உறுதிசெய்கின்ற ஒரு காத்திரமான நிலையான விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க முறைமையைப் பேணுதல்

செயற்பணி

கொள்கை வகுத்தமைத்தல், வசதியளித்தல், ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் மற்றும் தாக்கங்களை மதிப்பிடுதல் என்பவற்றின் ஊடாக தேசிய அபிவிருத்தி இலக்குகளை நோக்கி விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்கள் வழிநடத்தப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்தல்

இலக்குகள்

இலக்கு 1: தேசிய அபிவிருத்தி இலக்குகளை நோக்கி விவசாய ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கம் என்பவற்றை வழிநடத்துதல்
இலக்கு 2: தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் (NARS) திறன் அபிவிருத்தியை ஊக்குவித்தல்
இலக்கு 3: உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க நிலையை அடைதல்
இலக்கு 4: நிரல் முகவர் நிலையங்களில் தொடர்ச்சியான செயல் திறன் மதிப்பீட்டை ஊக்குவித்தல்
இலக்கு 5: தேசிய விவசாய ஆராய்ச்சியைப் பரப்பல் செய்தல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் புத்தாக்கங்களை கண்டுபிடித்தல்
இலக்கு 6: NARS முறைமையின் நிமித்தம் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையின் நிறுவனசார் ஆற்றலை வலுப்படுத்துதல்

இவிஆகொச இன் குறிக்கோள்கள்

1. விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்கள் என்பவற்றில் சிறந்து விளங்குதல்
2. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை அடைவதற்கு விவசாய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் என்பவற்றை வழிநடத்துதல்
3. தேசிய விவசாய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க முறைமையின் திறனை மேம்படுத்தல் (விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பம்)
4. விவசாய அபிவிருத்திகளுக்கு உதவும் பொருட்டு தரத்தில் உயர்ந்த தேவை சார்ந்த ஆராய்ச்சியை ஊக்குவித்தல்
5. உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்கள் என்பவற்றை அடையும் பொருட்டு, சர்வதேச, பிராந்திய நிறுவனங்களையும் மற்றும் தேசிய அளவான நிறுவனங்களையும் மேம்படுத்துதல்
6. தேசிய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் முன்னேற்றத்தை கண்காணித்து மதிப்பீடு செய்தல்
7. தேசிய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்களைப் பரம்பல் செய்தல் மற்றும் அவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
8. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை அடையும் பொருட்டு இவிஆகொச இன் நிறுவன சார் திறனை வலுப்படுத்துதல்

சபையின் உறுப்பினர்கள் பற்றிய விபரம் - ஆண்டு 2022

1. பேராசிரியர் காமினி சேனாநாயக்க, தலைவர், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை

2. கலாநிதி காமினி சமரசிங்க, மேலதிக செயலாளர் (விவசாய தொழில் நுட்பம்), கமத்தொழில் அமைச்சு

3. திருமதி எச். ஜி. வி. கே. ரீ. குணவர்த்தன, உதவிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி அமைச்சு

4. திருமதி பீ. ஏ. என். ஹர்ஷனி, பிரதிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி அமைச்சு

5. கலாநிதி எஸ். எச். எஸ். அஜந்த டி சில்வா, பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்

6. திருமதி தீபானி அலவத்துகொட, மேலதிக வனப் பாதுகாவலர் நாயகம் (ஆராய்ச்சி, கல்வி மற்றும் அபிவிருத்தி), வனப் பாதுகாப்புத் திணைக்களம்

7. கலாநிதி எச். எம். பி. கித்சிறி, பணிப்பாளர் நாயகம், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையம்

8. கலாநிதி (திருமதி) ஜி .ஏ. குணவர்த்தன, பிரதிப் பணிப்பாளர் (மிருக மருத்துவ ஆராய்ச்சி), மிருக மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம், கன்னொறுவ

9. திரு சித்ரால் ஜயவர்த்தன, பொருளியியலாளர், இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை

10. கலாநிதி எல். எஸ். கே. ஹெட்டிஆராச்சி, பணிப்பாளர், தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்

11. திருமதி ஜே. எம். ரீ. ஜயசுந்தர, மேலதிக செயலாளர், பெருந்தோட்டங்கள் அமைச்சு

12. பேராசிரியர் ரன்ஜித் சேனாரத்த, தலைவர், தேசிய விஞ்ஞான மன்றம்

13. திரு அனுர வீரகோன், தலைவர் / முகாமைப் பணிப்பாளர், எக்ரோ கல்செர் ட்ரென்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம்

14. திரு பிரபாத் விமல் குமார, செயலாளர் / பணிப்பாளர், இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை

இல.	பெயர்	246 - வது கூட்டம் 18.01.2022	247 - வது கூட்டம் 15.02.2022	248 - வது கூட்டம் 15.03.2022	249 - வது கூட்டம் 16.08.2022	250 - வது கூட்டம் 26.09.2022	251 - வது கூட்டம் 18.10.2022	252 - வது கூட்டம் 20.12.2022
1	பேராசிரியர் காமினி சேனாநாயக்க	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித் திருந்தார்
2	திரு பிரபாத் விமல் குமார	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித் திருந்தார்
3	கலாநிதி ஜி. ஏ. குணவர்த்தன	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை
4	கலாநிதி எச். எம். பி. கித்சிறி	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	X
5	கலாநிதி எஸ். எச். எஸ். அஜந்த டி சில்வா	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை	X
6	கலாநிதி டப்ளியூ. ஜி. எல். சமரசிங்க	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்
7	திரு சித்ரால் ஜயவர்ண	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்
8	கலாநிதி எல். எஸ். கே. ஹெட்டிஆராச்சி	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்
9	பேராசிரியர் ரன்ஜித் சேனாரத்ன	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை	சமூகமளித்து இருக்கவில்லை	சமூகமளித்து இருக்கவில்லை	சமூகமளித்து இருக்கவில்லை	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்
10	திரு அனுர வீரகோன்	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை
11	திருமதி எச். ஜி. வி. கே. ரீ. குணவர்த்தன	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை	சமூகமளித்து இருக்கவில்லை	X	X	X	X
12	திருமதி தீபானி அலவத்துகொட	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை	சமூகமளித்து இருக்கவில்லை	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்
13	செல்வி ஜே. எம். ரீ. ஜயசுந்தர	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூகமளித்து இருக்கவில்லை	X	X	X	X
14	திருமதி பீ. ஏ. என். ஹர்ஷனி	X	X	X	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்	சமூமளித்து இருந்தார்

E = லீவு வழங்கப்பட்டது, A = சமூகமளித்து இருக்கவில்லை, P = சமூகமளித்து இருந்தார்,

X = சபையின் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்படவில்லை

சபையின் கூட்டங்கள் - 2022

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில், மொத்தம் ஏழு சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சபையின் தலைவராக பேராசிரியர் காமினி சேனாநாயக்க அவர்கள் இருந்தார்கள். திரு பிரபாத் விமல் குமார அவர்கள் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சபையின் செயலாளராக / பணிப்பாளராக இருந்தார்கள்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் - 2022

நிதி மற்றும் நிருவாக விடயங்கள் ஆகியன பற்றி கலந்துரையாடும் முகமாக 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாக இரண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் (கமுகு) கூட்டங்கள் இவிஆகொச இல் நடத்தப்பட்டன.

பெயர்	நிறுவனம்	65 - வது கூட்டம் 20.09.2022	66 - வது கூட்டம் 30.12.2022
திருமதி பீ. ஏ. என். ஹர்ஷனி (தலைவர்)	பிரதிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி அமைச்சு	சமூகமளித்து இருந்தார்	சமூகமளித்து இருந்தார்
திரு சித்ரால் ஜயவர்ன	பொருளியலாளர், இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை	X	சமூகமளித்து இருந்தார்
கலாநிதி டப்ளியூ. எல். ஜி. சமரசிங்க	மேலதிக செயலாளர் (விவசாய தொழில் நுட்பம்), கமத்தொழில் அமைச்சு	X	சமூகமளித்து இருந்தார்
கலாநிதி எஸ். எச். எஸ். அஜந்த டி சில்வா	பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்	சமூகமளித்து இருந்தார்	X
கலாநிதி எச். எம். பி. கித்சிறி	பணிப்பாளர் நாயகம், NARA	சமூகமளித்து இருந்தார்	X
திருமதி டப்ளியூ. எஸ். போபகமகே	கணக்காய்வு அத்தியட்சகர், விவசாய மற்றும் கமநல சபை	சமூகமளித்து இருந்தார்	சமூகமளித்து இருந்தார்
திரு இ. டப்ளியூ. பி. கே. பிரியதர்ஷன	உள்ளகக் கணக்காய்வாளர், கமத்தொழில் அமைச்சு	சமூகமளித்து இருந்தார்	X

E = லீவு வழங்கப்பட்டது, A = சமூகமளித்து இருக்கவில்லை,

X = சபையின் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்படவில்லை

அறிமுகம்

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை (இ வி ஆ கொ ச) 1987 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 22 ஆம் திகதி கமத்தொழில் அமைச்சின் கீழ் 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இ வி ஆ கொ ச சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது. அதன் பின்னர், இ வி ஆ கொ ச ஆராய்ச்சி முகாமைத்துவத்தில் தீவிரமாக ஈடுபட்டு, விவசாய ஆராய்ச்சிக்கு உதவி வருகின்றது. தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையில் (NARS) இ வி ஆ கொ ச தனது கட்டாய தொழிற்பாடுகளுக்கு முதன்மை பொறுப்பை வகிக்கின்றது. NARS முறைமையில் விவசாய ஆராய்ச்சியை நடத்த உகந்த சூழலை உருவாக்குவதன் மூலம் விவசாய ஆராய்ச்சி துறையில் விவசாய ஆராய்ச்சியையும் மற்றும் அபிவிருத்தியையும் வலுப்படுத்துவதற்கான கொள்கைகளையும் மற்றும் உத்திகளையும் இந்த சபை வகுத்தமைக்கின்றது. விவசாய ஆராய்ச்சி முகாமைத்துவம் இ வி ஆ கொ ச இன் முக்கிய கட்டாய தொழிற்பாடுகளில் ஒன்றாகும். ஆராய்ச்சி முன்னுரிமைப் பகுதிகளைக் கண்டறிதல், அந்தந்த துறைகளில் தகவல்களைப் பகிர்வதன் மூலம் தொடர்புகளை எளிதாக்குதல், ஆராய்ச்சியில் எதிர்கொள்ளும் தடைகளைத் நீக்கல் மற்றும் அந்தந்த குழுக்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவதில் பங்கு வகித்தல் என்பன இ வி ஆ கொ ச இன் முக்கிய செயற்பாடுகள் உள்ளடக்குகின்றன. தற்பொழுது சபையின் மூலம் ஆறு தேசிய பிரிவுக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அவையாவன பின்வருமாறு:

உணவுப் பயிர்கள் பிரிவு பற்றிய தேசிய குழு (NCFCS)
பெருந்தோட்டப் பயிர்கள் பிரிவு பற்றிய தேசிய குழு (NCPS)
பூந்தாவர வளர்ப்புப் பிரிவு பற்றிய தேசிய குழு (NCFLS)
காடு வளர்ப்புப் பிரிவு பற்றிய தேசிய குழு (NCFS)
மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் பிரிவு பற்றிய தேசிய குழு (NCFARS)
கால்நடைகள் மற்றும் கோழி வளர்ப்பு பிரிவு பற்றிய தேசிய குழு (NCLPS)

மேலும், குறித்த விஞ்ஞான சேவைகளுக்காக பின்வருவன போன்ற விஷேட விஞ்ஞானக் குழுக்களும் நியமிக்கப்பட்டன:

i. இலங்கை உணவு விவசாய சஞ்சிகை பதிப்பாசிரியர் குழு
ii. ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் பற்றிய உப குழு

சபையின் கட்டாய தொழிற்பாடுகள்

1. விவசாய ஆராய்ச்சியை, ஒருங்கிணைத்தல், திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் மற்றும் அமைச்சரால் குறிப்பிடப்படும் பிற தொடர்புடைய விடயங்கள் தொடர்பான சகல விடயங்களிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
2. தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கையையும் மற்றும் முன்னுரிமைகளையும் வகுத்தமைத்தல்.
3. தேசிய அபிவிருத்தி நோக்கங்களை மேம்படுத்துவதற்கு விவசாய ஆராய்ச்சியின் ஒட்டுமொத்த நோக்கங்களையும் மற்றும் குறிக்கோள்களையும் வரையறுத்தல்.
4. விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் மற்றும் தாபனங்களுக்கும் தேவைப்படும் நிதி, மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் மற்றும் அத்தகைய நிறுவனங்கள் மற்றும் தாபனங்கள் என்பவற்றின் ஊழியர்களின் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் என்பன பற்றி உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை செய்தல்.
5. நிறுவன மற்றும் துறை சார்ந்த விவசாய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அவற்றின் முன்னுரிமைகள், நிதி தொடர்பான பரிந்துரைகளை நிதி மற்றும் திட்டமிடல் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கு முன்வைத்தல்.
6. விவசாய ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவதற்கு வசதி செய்தலும் மற்றும் ஊக்குவித்தலும்.
7. விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையேயான தகவல்தொடர்பு மார்க்கமாக தொழிற்படுதல்.
8. நிறுவனங்களுக்கு இடையேயான விவசாய ஆராய்ச்சிக் கருத் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல் மற்றும் அவற்றுக்கு நிதியளித்தல்.
9. முழு விவசாய ஆராய்ச்சித் துறைக்கான சேவைகளுக்குரிய விஷேட விஞ்ஞானசார் சேவைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நிதியளித்தல்.
10. தேசிய, சர்வதேச அளவில் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்பை ஊக்குவித்தல்.
11. விவசாய ஆராய்ச்சி தொடர்பான சர்வதேச, தேசிய மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான பிரச்சினைகள் தொடர்பான மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல்.
12. விவசாய ஆராய்ச்சி ஊழியர்களுக்கு முதுகலைப் பட்டப் பயிற்சியை ஏற்பாடு செய்தல் மற்றும் வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுளள ஆராய்ச்சி சார்ந்த நிறுவனங்களுடன் விஞ்ஞானிகளை பரிமாற்றிக் கொள்ளல், மற்றும்
13. விவசாய ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள், நிறுவனங்கள், பிரிவுகள் என்பவற்றின் செயல் திறனை அவ்வப்போது மதிப்பிடுதல்.

தலைவரின் செய்தி

நாட்டின் பொருளாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அபிவிருத்தி ஆகியவற்றில் விவசாய ஆராய்ச்சி முக்கியமான பங்கை வகிக்கின்றது. மேலும் விவசாயத் துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதிலும் அது முக்கிய பங்கை வகிக்கின்றது. எனவே, இ வி ஆ கொ ச இன் ஆதரவின் கீழ் தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையில் (NARS) அறுநூறுக்கும் அதிகமான விஞ்ஞானிகளால் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டில் தற்போது நிலவுகின்ற நிதி நெருக்கடியில், 2022 ஆம் ஆண்டில் முக்கியமான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதில் மிக முக்கியமான கடும் சூழ்நிலையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந்த வகையில் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை (இ வி ஆ கொ ச) NARS இன் உயர் அமைப்பு என்ற வகையில், ஆராய்ச்சிக் கருத் திட்டங்களுக்கு நிதியளித்தல் மற்றும் கண்காணித்தல், விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களை மீளாய்வு செய்தல் மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற பல்வேறு முயற்சிகளின் மூலம் நாட்டின் அபிவிருத்திற்கு பெரும் பங்களிப்பை நல்கியுள்ளது.

இந்த ஆண்டில், விவசாயத் திணைக்களம் (NARP) (35) தேசிய பல்கலைக் கழகங்கள் (NARP-NUS) (10) மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான பல துறை ஆராய்ச்சி மானியத் திட்டம் (IIMDRGS) (05) அடங்கலாக 50 கருத் திட்டங்களுக்கு இந்த ஆண்டு நிதியளித்து செயற்படுத்தியது. அந்தந்த கருத் திட்டங்களில் இருந்து முன்னேற்ற அறிக்கைகள் சேகரிக்கப்பட்டு, தொடர்புடைய உரிய குழுக்களால் / துணைக் குழுக்களால் மதிப்பீடு செய்யப்பட்டன. பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (FRDI), தோட்டக் கலைப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (HORDI) தாவர மரபியல் வளங்கள் நிலையம் (PGRC), இயற்கை விவசாய முகாமைத்துவ நிலையம் (NRMC), பேராதெனிய பல்கலைக் கழகம் (UoP), தானிய பருப்பு மற்றும் எண்ணெய் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (GLOCDC), வயல் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் மற்றும் அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (RRDI) முதலியவற்றில் மேற்கொள்ளப்பட்ட 31 கருத் திட்டங்களுக்கு ஸ்தலம் சார்ந்த வருடாந்த முன்னேற்றக் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் மொத்தம் 20 முனைய அறிக்கைகளும் சேகரிக்கப்பட்டு, வெளிவாரி மதிப்பாய்வாளர்களால் மதிப்பீடு செய்வதற்காக அனுப்பப்பட்டன.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகள் மற்றும் தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் தலைவர் ஆகியோருடனான வருடாந்த கலந்துரையாடல் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி அன்று இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையில் நடைபெற்றது. தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையில் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோர் இதில் பங்கேற்று, நாட்டில் விவசாய ஆராய்ச்சி தொடர்பான கடும் பிரச்சினைகள் பற்றி விவாதித்தனர். மேலும் NARS அதிகாரிகள், மனிதவளப் பற்றாக்குறை, விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் போதிய நிதியின்மை ஆகியவை தமது நிறுவனங்களில் ஆராய்ச்சியும் மற்றும் அபிவிருத்தியும் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான கடும் பிரச்சினைகளாக உள்ளன எனவும் அவர்கள் தெரிவித்தனர். அந்தப் பிரச்சினைகளை சமாளிப்பது பற்றி உரிய அமைச்சுக்களின் அதிகாரிகள் கலந்துரையாடினர்.

இ வி ஆ கொ ச திறன்கள் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், NARS அதிகாரிகளுக்கு 79 உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அவர்கள் ஆசிய நாடுகளில் உள்ள அதாவது இந்தியா, பிலிப்பைன்ஸ், மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் PhD பட்டப்படிப்புகளில் அல்லது MSc பட்டப்படிப்புகளில் இணைந்துள்ளனர். நன்கொடை நிறுவனம் என்ற வகையில் இ வி ஆ கொ ச தனது மாணவர்களுக்கு நிதியுதவிகள் அடங்கலாக தேவையான உதவிகளை வழங்கியுள்ளது. அவர்களில், 26 விஞ்ஞானிகள் முதுகலைப் பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்துள்ளார்கள். 52 பேர் படிப்பைத் தொடர்கின்றனர். ஒரு மாணவர் பட்டப்படிப்பை கைவிட்டார். இது தவிர, இ வி ஆ கொ ச உள்ளூர் முதுகலைப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை 2022 ஆம் ஆண்டு முதல் தொடங்கியுள்ளது. மேலும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் (HARTI) விஞ்ஞானிகளுக்கும் உள்நாட்டில் முதுகலை படிப்படிப்பை தொடர்வதற்கு இரண்டு புலமைப்

பரிசில்கள் வழங்கப்பட்டன.

இறுதியாக, இந்த முக்கியமான நேரத்தில் நிறுவனத்தை வெற்றிகரமாக நிர்வகித்ததற்காக சபையின் சகல உறுப்பினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். செயலாளர் / பணிப்பாளர், ஆராய்ச்சி முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், சிரேஷ்ட விஞ்ஞானிகள், ஆராய்ச்சி அலுவலர்கள், நிர்வாக உதவிப் பணிப்பாளர், கணக்காளர், ஏனைய பணியாளர்கள் ஆகியோர் தமது பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றி அர்ப்பணிப்புடன் பணியாற்றியதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் காமினி சேனாநாயக்க
தலைவர்
இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை

செயலாளரின் செய்தி

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை (இ வி ஆ கொ ச) நிதி நெருக்கடி நிலைமை காணப்பட்ட போதிலும் 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சட்டத்தின்படி கட்டளையிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டது. இ வி ஆ கொ ச திறன்கள் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வேலையரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் ஆராய்ச்சி நிதி மற்றும் NARS விஞ்ஞானிகளின் மனித வளங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் NARS முறைமைக்கு இ வி ஆ கொ ச தீவிரமாக ஆதரவளிக்கின்றது.

2022 ஆம் ஆண்டில், ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் மற்றும் ஆராய்ச்சி முன்னுரிமைகளை மேம்படுத்தவும் விவசாயத் துறையின் நிபுணர்களைக் கொண்டு ஆறு தேசியத் துறை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. NARS மற்றும் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட 50 ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் அரையாண்டு ஆராய்ச்சி முன்னேற்ற மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (FRDI), தோட்டக்கலைப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (HORDI) தாவர மரபியல் வள நிலையம் (PGRC), இயற்கை வள முகாமைத்துவ நிலையம் (NRMC), தானிய பருப்பு மற்றும் எண்ணெய் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (GLOCDC), வயல் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் மற்றும் அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (RRDI), பேராதெனியப் பல்கலைக் கழகம் (UoP) முதலியவற்றில் மேற்கொள்ளப்பட்ட 31 கருத் திட்டங்களுக்கு அதேவிடத்து முன்னேற்ற கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. சபை நியமித்த நிபுணர் குழு, இயற்கை வள முகாமைத்துவ நிலையத்தில் (NRMC) வெளிவாரி மதிப்பாய்வை நடத்தியது. குறித்த அறிக்கை 2022 ஆம் ஆண்டில் சபைக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில், NARS இன் DOA இன் 13 நிறுவகங்கள் மற்றும் 19 துணை நிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து இலத்திரனியல் அமைப்பில் ஆண்டுதோறும், ஆராய்ச்சி பணியாளர்கள், ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள் மற்றும் முந்தைய ஆண்டின் மீண்டெழும் ஆராய்ச்சி வரவு செலவுத் திட்டம் என்பன பற்றிய தகவல்களை இ வி ஆ கொ ச சேகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் முப்பத்தொரு தரவுத் தளங்களில் இருந்து தரவுகளை சேகரிக்க எதிர்பார்க்கப்பட்டது. இருபத்தி ஆறு தரவுத் தளங்களில் இருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன. தரவுத் தளங்கள் செயல்முறைப்படுத்தப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டன. செயல்முறைப்படுத்தப்பட்ட தரவுத் தளங்களை தொகுத்து 2021 ஆம் ஆண்டின் நிமித்தம் தேசிய தரவுத் தளம் தயாரிக்கப்பட்டது. ஐந்து INFORM ஒருங்கிணைப்பாளர்களுக்கு Zoom தொழில் நுட்பத்தின் மூலம் தனியாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

அமைச்சரவை வழங்கிய அங்கீகாரத்தின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் திறன்கள் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து 25 விஞ்ஞானிகள் முதுகலை பட்டப்படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். மேலும் 54 பேர் பின்பற்றி வருகின்றனர். இ வி ஆ கொ ச 2022 ஆம் ஆண்டு முதல் உள்ளூர் முதுகலைப் பட்டப்படிப்பு சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தையும் ஆரம்பித்தது. மேலும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் (HARTI) விஞ்ஞானிகளுக்கும் இரண்டு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இ வி ஆ கொ ச NARS விஞ்ஞானிகளின் நிமித்தம் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி உரிய அமைச்சுக்களின் அதிகாரிகளுடனும் மற்றும் தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் தலைவருடனும் வருடாந்த கலந்துரையாடலாக மூன்று வேலையரங்குகளை நடத்தியது. மலர் வளர்ப்பு ஆராய்ச்சி பற்றிய தேசிய மாநாடும் (NASFLOR-2022) இ வி ஆ கொ ச இற்கு PhD ஆய்வு அறிக்கையை ஒப்படைப்பதற்கான திறன்கள் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 ஆம் திகதி அன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறுதியாக, இ வி ஆ கொ ச இன் தலைவர், சபையின் உறுப்பினர்கள், கமுகு உறுப்பினர்கள், அனைத்து தேசியக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் இ வி ஆ கொ ச ஊழியர்கள் ஆகிய அனைவருக்கும் 2022 ஆம் ஆண்டில் சபையின் இலக்குகளை அடைவதில் சபைக்கு ஒத்துழைத்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரபாத் விமல் குமார
செயலாளர் / பணிப்பாளர்
இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை

2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இ வி ஆ கொ ச இன் செயற்பாடுகள்

விவசாய ஆராய்ச்சிக் கொள்கை வகுத்தமைப்பு
கட்டாயத் தொழிற்பாடுகளில் அடங்கும் விடயங்கள்

- ஒழுங்கமைப்பு, ஒருங்கிணைப்பு, திட்டமிடுல் மற்றும் செயல்படுத்துதல் மற்றும் விவசாய ஆராய்ச்சியை மேற்கொண்டு நிறைவேற்றுதல் மற்றும் அமைச்சரால் குறிப்பிடப்படும் இது போன்ற ஏனைய பிற விடயங்கள் சம்பந்தமான அனைத்து அம்சங்களிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் (1)

- தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளையும் முன்னுரிமைகளையும் வகுத்தமைத்தல் (2)

- தேசிய அபிவிருத்தி சார்ந்த நோக்கங்களை மேம்படுத்தும் நோக்கில் விவசாய ஆராய்ச்சியின் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் மற்றும் பரப்பெல்லையையும் வரையறுத்தல் (3)
- விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே ஒரு தகவல் தொடர்பு மார்க்கமாக தொழிற்படுதல் (7)

- விவசாய ஆராய்ச்சி தொடர்பான சர்வதேச, தேசிய நிறுவனங்களுக்கும், நிறுவனங்களுக்கும் இடையேயான பிரச்சினைகள் தொடர்பான மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல்.

25 தேசிய விவசாய ஆராய்ச்சி நிறுவகங்களினது (NARI) ஆராய்ச்சி செயல் திட்டங்கள் பற்றிய பகுப்பாய்வு

தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் ஆராய்ச்சி செயல் திட்டங்களை சேகரிப்பதும் அவற்றை பகுப்பாய்வு செய்வதும் இ வி ஆ கொ ச இன் மிக முக்கியமான கட்டாய செயல்பாடுகளில் ஒன்றாகும். பெருந்தோட்டம், உணவுப் பயிர்கள், மீன்பிடி மற்றும் நீர்வளம், கால்நடைகள் மற்றும் கோழி வளர்ப்பு, வனவியல் மற்றும் மலர் வளர்ப்பு முதலிய துறைகளை உள்ளடக்கி ஐந்து அமைச்சுக்களின் கீழ் இயங்குகின்ற 25 ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு அரசாங்கம் ஆண்டுதோறும் அதிக நிதிகளை ஒதுக்குகின்றது. எனவே தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகளின்படி இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து பார்ப்பது மிகவும் அவசியமாகும். ஆகையால், சேகரித்த இந்த ஆராய்ச்சி செயல் திட்டங்கள், இ வி ஆ கொ ச மூலம் இனங்காணப்பட்டுள்ள தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகளின் பிரகாரம் அந்த ஆராய்ச்சி செயல் திட்டங்கள் காணப்படுகின்றனவா என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்காக பகுப்பாய்வு செய்யப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் 24 உள்நாட்டு நிறுவனங்களிலிருந்து செயல் திட்டங்கள் சேகரிக்கப்பட்டன.

தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் (NARP)
இலங்கையின் தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் (NARP) என்பது தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமை (NARS) மற்றும் தேசிய பல்கலைக் கழக முறைமை (NUS) ஆகியவற்றில் விவசாய ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு நிதி வழங்கும் திட்டமாகும். இந்தத் திட்டங்கள் குறிப்பிட்டவொரு காலத்திற்கு இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை மூலம் இனங்காணப்பட்டுள்ள தேசிய விவசாய ஆராய்ச்சி முன்னுரிமைப் பிரிவுகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த NARP திட்டத்தில் ஏழு உப செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன. அவையாவன (1). எண்ணக்கருப் பத்திரங்களை அழைத்து அவற்றை மதிப்பிடுதல், (2). தேர்ந்தெடுத்த எண்ணக்கருப் பத்திரங்களில் இருந்து முன்மொழிவுகளை அழைத்து மதிப்பிடுதல், (3).தேர்ந்தெடுத்த ஆராய்ச்சித் திட்டங்களுக்கு விருதுகளை வழங்குதல், (4). புதிய மற்றும் நிகழும் கருத் திட்டங்களுக்கான வரவு செலவுத் திட்டத்தை

சிபாரிசு செய்தல் (5) ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணித்தல், (6). நிகழும் கருத் திட்டங்களை முகாமை செய்தல் மற்றும் (7). முனைய அறிக்கைகளை மதிப்பிடுதல்.

புதிய NARP கருத் திட்டங்கள் வருடாந்தம் 1 ஆண்டு முதல் 3 ஆண்டுகள் வரை வழங்கப்படும். தற்போது, விவசாயத் திணைக்களத்திற்கும் தேசிய பல்கலைக் கழகங்களுக்கும் நிதி வழங்கப்படுகின்றது. NARP என்ற ஒரு விஷேட செலவினத் தலைப்பின் கீழ் நிதி நேரடியாகவே விவசாயத் திணைக்களத்திற்கு மாற்றப்படுகின்றது. தேசிய பல்கலைக் கழகங்களினால் நடத்தப்படும் கருத் திட்டங்களுக்கு விவசாய அமைச்சின் கீழ் NARP-NUS என்ற விஷேட செலவினத் தலைப்பின் மூலம் நிதி ஒதுக்கப்படுகின்றது.

சபை அங்கீகரித்த தேர்வு அளவுகோல்களின்படி எண்ணக்கருப் பத்திரங்கள் இ வி ஆ கொ ச இன் மூலம் நுண்ணித்து ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றன. புள்ளிகளின் அடிப்படையில் அந்த எண்ணக்கருப் பத்திரங்கள் தரப்படுத்தப்படுகின்றன. தேர்ந்தெடுத்த எண்ணக்கருப் பத்திரங்களில் இருந்து ஆராய்ச்சி முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன. சபை அங்கீகரித்துள்ள மதிப்பீட்டு அளவுகோல்களின்படி இந்த முன்மொழிவுகள் இரண்டு வெளிவாரி மதிப்பாய்வாளர்களால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. கருத்துரையாளர்களின் கருத்துக்கள் சிபாரிசுக்காக உரிய துறை சார்ந்த குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, உரிய துறை சார்ந்த குழுக்களால் பரிந்துரைக்கப்படும் முன்மொழிவுகள் சபைக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

NARP-NUS கருத் திட்டங்கள் தொடர்பாக, உரிய பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை மற்றும் விவசாய அமைச்சு ஆகிய மூன்று தரப்புகளினாலும் ஒரு முற்தரப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

NARP இற்கான அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத் தேவை ஒவ்வொரு ஆண்டும் நிதி ஏற்பாட்டிற்காக கமத்தொழில் அமைச்சின் மூலம் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிகழும் கருத் திட்டங்களின் முகாமை ஆண்டு முழுவதும் இ வி ஆ கொ ச இன் உரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றது. பவர்-பொய்ன்ட் சமர்ப்பங்களின் மூலமாகவும், NARP கருத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் உரிய நிலையங்களுக்கு நேரில் சென்று பார்வையிடுவதன் மூலமாகவும் உரிய கருத் திட்டங்களின் முன்னேற்றம் உள்நாட்டில் கண்காணிக்கப்படுகின்றது. இந்த செயற்பாடுகளில், இ வி கொ ச இற்கு தேசிய குழுக்கள் உதவும்.

கருத் திட்டத்தை நிறைவு செய்த பின்னர், இ வி ஆ கொ ச வழங்கிய வழிகாட்டல்களின்படி தயாரித்த முனைய அறிக்கைகள் சேகரிக்கப்பட்டு, இ வி ஆ கொ ச வழங்கிய மதிப்பீட்டு அளவுகோல்களின்படி அவை வெளிவாரி மதிப்பாய்வாளர்களால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதன் பின்னர், மீளாய்வின் நிமித்தம் கருத்துக்கள் உரிய துறை சார்ந்த குழுவின் பரிந்துரைக்காகவும், இறுதியாக சபையின் அங்கீகாரத்திற்காகவும் சமர்ப்பிக்கப்படும். மேலும் கருத் திட்டங்களின் பலன்கள் அக்கறையுடைய தரப்புகளுக்கு அவற்றின் விரிவாக்கல் சேவைகள் மூலம் பிரதான ஆய்வாளரால் பரப்பப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில், புதிய கருத் திட்டங்களை ஆரம்பிக்க கூடாது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தால் புதிய கருத் திட்டங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. தேசிய பல்கலைக் கழகங்களில் இருந்து 10 கருத் திட்டங்களும் மற்றும் (35) வி.தி கருத் திட்டங்களும் என மொத்தம் 45 கருத் திட்டங்கள் NARP திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. முதலாம் மற்றும் இரண்டாம் அரை ஆண்டுகளுக்கான முன்னேற்ற அறிக்கைகள் அந்தந்த கருத் திட்டங்களின் PI களில் இருந்து சேகரிக்கப்பட்டு, இணையவழி மெய்நிகர் வசதிகளின் மூலம் உரிய குழுக்களால் / உப குழுக்களால் மதிப்பீடு செய்யப்பட்டன. பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (FRDI), தோட்டக்கலை பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (HORDI) தாவர மரபியல் வள நிலையம் (PGRC), இயற்கை வள முகாமைத்துவ நிலையம் (NRMC), பேராதெனிய பல்கலைக் கழகம் (UoP), தானிய பருப்பு மற்றும் எண்ணெய் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும்

அபிவிருத்தி நிலையம் (GL- OC), வயல் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் மற்றும் அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (RRDI) முதலிய நிறுவகங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த 31 கருத் திட்டங்களுக்கு வருடாந்த ஸ்தல முன்னேற்றக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இது தவிர, மொத்தமாக 20 முனைய அறிக்கைகள் சேகரிக்கப்பட்டு அவை வெளிவாரி மதிப்பாய்வாளர்களினது மதிப்பீட்டிற்கு அனுப்பப்பட்டன. அவற்றில் 14 அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. எஞ்சிய ஏனைய 8 அறிக்கைகளும் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

2022 ஆம் ஆண்டில், 2023 ஆம் ஆண்டிற்கான எண்ணகருப் பத்திரங்கள் அழைக்கப்பட்டன. ஆனால் எந்த விதமான எண்ணக்கருப் பத்திரங்களும் கிடைக்கவில்லை. ஆகையினால் 2021 ஆம் ஆண்டில் கிடைத்த எண்ணக்கருப் பத்திரங்கள் 2023 ஆம் ஆண்டில் நிதியுதவிக்காக பரிசீலிக்கப்பட்டன. வி.தி. மற்றும் NUS ஆகியவற்றில் இருந்து தேர்ந்தெடுத்த 20 எண்ணக்கருப் பத்திரங்களில் இருந்து முன்மொழிவுகள் அழைக்கப்பட்டன. வி.தி. (12) முன்மொழிவுகளும் NUS (4) பதினாறு முன்மொழிவுகளும் கிடைத்தன. மேலும் அவை வெளிவாரி மதிப்பாய்வாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டன. அந்தந்த துறை சார்ந்த குழுக்கள் மேற்கூறிய முன்மொழிவுகளை சிபாரிசு செய்தன. அந்த முன்மொழிவுகளுக்கு சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டது.

இ வி ஆ கொ ச இன் தேசிய துறை சார்ந்த குழுக்கள்

இ வி ஆ கொ ச இல் ஆறு குழுக்கள் செயல்படுகின்றன. உணவுப் பயிர்த் துறை, தோட்டப் பயிர்த் துறை, மலர் வளர்ப்புத் துறை, வனவியல் துறை, கால்நடைகள் மற்றும் கோழி வளர்ப்பு மற்றும் மீன்வளம் மற்றும் நீரியல் வளங்கள் பற்றிய தேசியக் குழு முதலியவை இந்தக் குழுக்களாகும். தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமை (NARS), தேசிய பல்கலைக் கழக முறைமை (NUS) மற்றும் தனியார் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிய துறைகளில் தத்தமது நிபுணத்துவத்தை /அனுபவத்தைக் கருத்தில் கொண்டு இந்த தேசியத் துறை சார்ந்த குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த ஒவ்வொரு துறையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இ வி ஆ கொ ச சபை உறுப்பினர்கள் ஒவ்வொரு துறை சார்ந்த குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டனர்.

i) உணவுப் பயிர்த் துறை பற்றிய தேசியக் குழு (NCFCS)

NARS நிறுவனங்கள், NUS தனியார் துறை நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 16 உறுப்பினர்கள் இந்தக் குழுவில் இருந்தனர். மேலும் இ வி ஆகொச இன் உணவுப் பயிர்த் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அஜந்த டி சில்வா குழுவின் தலைவராகவும், இ வி ஆ கொ ச இன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. எல். ஜி. ஹெட்டியாராச்சி குழுவின் செயலாளராகவும் இருந்தனர். உணவுப் பயிர்த் துறையில் தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகளை மேம்படுத்துதல், உணவுப் பயிர்த் துறை தொடர்பான ஆராய்ச்சிக் கொள்கையை மேம்படுத்த அல்லது உருவாக்க, தற்போதுள்ள விவசாய ஆராய்ச்சிக் கொள்கையை மீளாய்வு செய்தல், உணவுப் பயிர்த் துறையில் செயல்பாடுகள், விவசாயத் துறையை மேம்படுத்த தற்போதைய பிரச்சினைகளை / ஆராய்ச்சி சார்ந்த தேவைகளை மற்றும் /அல்லது உரிய துறையில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் தற்போதைய நிலையை மீளாய்வு செய்தல் என்பவற்றின் நிமித்தம் ஒரு குழு கூட்டம் நடைபெற்றது.

உணவுப் பயிர்த் துறை தேசியக் குழுவுக்கு வசதியளிப்பதற்காக தாவர வளர்ப்பு, விசாயம், தாவரப் பாதுகாப்பு, அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பம் மற்றும் விவசாய உயிரியல் தொழில் நுட்பம் ஆகிய துறைகளின் அடிப்படையில் மேலும் ஐந்து உப குழுக்கள் நியமிக்கப்பட்டன. மேற்குறித்த கருத் திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு:

விவசாயம் பற்றிய தேசிய உப குழு (NSCA)
2022 ஆம் ஆண்டில் மூன்று குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. இந்த உப குழுவின் கீழ் செயற்படுத்திய கருத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி கண்காணிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் ஐந்து (5) புதிய முன்மொழிவுகளை வழங்க சிபாரிசு செய்யப்பட்டது.

கலாநிதி எம். ஏ. பி. டப்ளியூ. கே. மளவிஆராச்சி (FCRDI) இந்த உப குழுவின் தலைவராகவும், திரு. எல். ஜி. ஹெட்டியாராச்சி (இ வி ஆ கொ ச) குழுவின் செயலாளராகவும் இருந்தனர். பேராசிரியர். எஸ். சுபசிங்க (UoR), கலாநிதி மனோஜ் கொடிகார, கலாநிதி எம். எஸ். நிஜாமுதீன் மற்றும் திரு. உதய ரத்நாயக்க ஆகியோர் இந்தக் கூட்டங்களில் வி.தி. ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு உறுப்பினர்களாகக் கலந்து கொண்டனர்.

தாவர இனப்பெருக்கம் பற்றிய தேசிய உப குழு (NSCPB)
மூன்று குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. NSCPB கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க இரண்டு குழுக் கூட்டங்களும், நிதியுதவிக்காக நான்கு (4) புதிய NARP முன்மொழிவுகளை சிபாரிசு செய்வதற்காக ஒரு குழுக் கூட்டமும் நடத்தப்பட்டன.

கலாநிதி எஸ். கே. வாசல (வி. தி.) இந்த உப குழுவின் தலைவராக இருந்தார். திரு. எல். ஜி. ஹெட்டி ஆராச்சி (இ வி ஆ கொ ச) குழுவின் செயலாளராக இருந்தார். திருமதி பி. மாலதி, கலாநிதி ஜீவனி தித்து கொட, கலாநிதி சுமித் அபேசிறிவர்தன, திரு டப்ளியூ. டி லெஸ்லி மற்றும் பேராசிரியர் எஸ். ஏ. சி. என். பெரேரா ஆகியோர் இந்தக் கூட்டங்களில் குழு உறுப்பினர்களாக கலந்து கொண்டனர்.

தாவர பாதுகாப்பு பற்றிய தேசிய உப குழு (NSCPP)
இரண்டு குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவற்றில் ஒன்று நிகழும் ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காகவும் மற்றொன்று நிதி உதவிக்காக மூன்று (3) புதிய NARP முன்மொழிவுகளை சிபாரிசு செய்வதற்காகவும் நடத்தப்பட்டன.

பேராசிரியர் தேவிகா கொஸ்தா (UoP) இந்த உப குழுவின் தலைவராகவும் திரு. எல். ஜி. ஹெட்டியாராச்சி (இ வி ஆ கொ ச) குழுவின் செயலாளராகவும் இருந்தனர். இந்தக் கூட்டங்களில் கலாநிதி டப்ளியூ. ஏ. ஆர். ரீ. விக்கிரமஆராச்சி மற்றும் திருமதி சுசந்தி சந்திரசேன ஆகியோர் குழு உறுப்பினர்களாகக் கலந்து கொண்டனர்.

தாவர உயிரியல் தொழில் நுட்பம் பற்றிய தேசிய உப குழு (NSCPBT)
பேராசிரியர் பிரதீபா பண்டாரநாயக்க (UoP) (தலைவர்), பேராசிரியர் திரு சம்மி அத்தநாயக்க (UoK), கலாநிதி டீ. பந்துப்ரியா (UoC), கலாநிதி காமினி சமரசிங்க (வி. தி.), கலாநிதி ஜயந்த சேனாநாயக்க (RRDI) ஆகியோர் NSCPBT இன் உப குழுவின் உறுப்பினர்களான இருந்தனர்.

அறுவடைக்கு பிந்தைய தொழில் நுட்பம் பற்றிய தேசிய உப குழு (NSCPHT)
பேராசிரியர் கே. கே. டீ. எஸ். ரணவீர (UoSJP) (தலைவர்), பேராசிரியர் டீ. ஏ. என். தர்மசேன (UoP), மற்றும் பேராசிரியர் எச். கே. சாரனந்த (WUSL) மற்றும் பேராசிரியர் இல்மிஹேவாஜூலிகே (ITI), பேராசிரியர் பாலிதவீரக்கொடி (NIPHM) ஆகியோர் NSCPBT இன் உப குழுவின் உறுப்பினர்களாவர்.

ii) தோட்டத் துறை பற்றிய தேசியக் குழு (NCPS)
இந்தக் குழுவில் தலைவர் மற்றும் செயலாளர் அடங்கலாக 14 உறுப்பினர்கள் இருந்தனர். அந்த சகல உறுப்பினர்களும் சபையினால் நியமிக்கப்பட்டனர். சபையின் பல்லாண்டு பயிர்த் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சமன் ஹெட்டி ஆராச்சி குழுவின் தலைவராகவும், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையின் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. சமீர திஸாநாயக்க குழுவின் செயலாளராகவும் இருந்தனர். 2022

ஆம் ஆண்டில், கூட்டத்தின் ஆரம்பத்தில் TOR பற்றி விவாதிக்க ஒன்லைன் விவாதம் நடத்தப்பட்டது. இதன் போது TOR பற்றி அறிந்து கொள்ளப்பட்டது. தோட்டப் பயிர்கள் துறையில் தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகளை மேம்படுத்துவதற்கான ஆரம்ப விவாதங்களும் தொடங்கப்பட்டன.

iii) வனவியல் துறை பற்றிய தேசியக் குழு (NCFS)

இந்தக் குழுவில் தலைவர் மற்றும் செயலாளர் அடங்கலாக 08 உறுப்பினர்கள் இருந்தனர். அந்த சகல உறுப்பினர்களும் சபையினால் நியமிக்கப்பட்டனர். சபையின் வனப் பிரிவைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மேலதிக வனப் பாதுகாவலர் கலாநிதி கே. எம். ஏ. பண்டார குழுவின் தலைவராகவும், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையின் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. சமீர திஸாநாயக்க குழுவின் செயலாளராகவும் இருந்தனர். 2022 ஆம் ஆண்டில், கூட்டத்தின் ஆரம்பத்தில் TOR பற்றி விவாதிக்க ஒன்லைன் விவாதம் நடத்தப்பட்டது. இதன் போது TOR பற்றி அறிந்து கொள்ளப்பட்டது.

iv) கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத் துறை பற்றிய குழு (NCLPS)

இந்தக் குழுவில் தலைவர் மற்றும் செயலாளர் அடங்கலாக 10 உறுப்பினர்கள் இருந்தனர். அந்த சகல உறுப்பினர்களையும் சபை நியமித்தது. சபையின் கால்நடை துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் மிருக மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஜி. ஏ. குணவர்தன குழுவின் தலைவராகவும், விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையின் சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி எஸ். எம். பி. சி. பத்மினி குழுவின் செயலாளராகவும் இருந்தனர். 2022 ஆம் ஆண்டில், ஒரு குழு கூட்டம் ஒன்லைன் வசதி மூலம் நடத்தப்பட்டது. குழு கூட்டத்தின் ஆரம்பத்தில் TOR பற்றி விவாதிக்கப் பட்டது. குழு செயற்படுத்திய இரண்டு கருத் திட்டங்களின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது. கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத் துறையில் தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகளை மேம்படுத்த ஆரம்ப விவாதங்களும் தொடங்கப்பட்டன.

v) மலர் வளர்ப்புத் துறை பற்றிய தேசியக் குழு (NCFLS)

இந்தக் குழுவில் தலைவர் மற்றும் செயலாளர் அடங்கலாக 09 உறுப்பினர்கள் இருந்தனர். அந்த சகல உறுப்பினர்களையும் சபை நியமித்தது. சபையின் மலர் வளர்ப்புத் துறையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன குழுவின் தலைவராகவும், விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையின் சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி எஸ். எம். பி. சி. பத்மினி குழுவின் செயலாளராகவும் இருந்தனர். 2022 ஆம் ஆண்டில், ஒரு குழு கூட்டம் ஒன்லைன் வசதியில் நடத்தப்பட்டது. தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகளை மேம்படுத்தும் நிமித்தம் ஒரு குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் குழுவின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த இரண்டு கருத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி ஆராயப்பட்டது.

.

vi) மீன்வள மற்றும் நீரியல் வள துறை பற்றிய தேசியக் குழு (NCFARS)

இந்தக் குழுவில் NARS நிறுவனங்கள், NUS மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 உறுப்பினர்கள் இருந்தனர். இ வி ஆ கொ ச இன் மீன்பிடித் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் NARA இன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எச். எம். பி. கித்சிறி குழுவின் தலைவராகவும், இ வி ஆ கொ ச இன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. எல். ஜி. ஹெட்டிஆராச்சி குழுவின் செயலாளராகவும் இருந்தனர். மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் பற்றிய தேசிய குழுவின் ஆராய்ச்சி முன்னுரிமைகளை மேம்படுத்துவதற்காக ஒரு குழு கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் குழுவின் கீழ் நடத்தப்பட்ட இரண்டு கருத் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

ஸ்தல கருத் திட்டக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

NARS ஆல் நடத்தப்படும் ஆராய்ச்சித் திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு இ வி ஆ கொ ச இன் கட்டாய தொழிற்பாடுகளில் ஒன்றாகும். அதன்படி, இ வி ஆகொச தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் கண்காணிப்பும் மற்றும் மதிப்பீடும் அவ்வப்போது மேற்கொள்கின்றன. கருத் திட்டங்களின் அரையாண்டு முன்னேற்றம் பற்றி ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பவர்-பொயின்ட் விளக்க சமர்ப்பத்தின் மூலம் உரிய தேசியக் குழுவால் / உப குழுக்களால் மதிப்பிடப்படுகின்றது. அதுமட்டுமின்றி, ஸ்தலக் கருத் திட்டக் கண்காணிப்பு ஆண்டுதோறும் அல்லது தேவையான போது குழு உறுப்பினர்கள் மற்றும் இவிஆகொச அதிகாரிகள் அடங்கிய குழுவால் அந்தந்தக் கருத் திட்டங்களின் பௌதீக முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த ஆண்டு காலப் பகுதியில், FRDI, HORDI, PGRC, UOP, NRMC, GLORDC, FCRDI மற்றும் RRDI ஆகியவற்றில் ஸ்தலக் கருத் திட்ட கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த நிறுவகங்களில் நடத்திய மொத்தம் 31 கருத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. அந்தக் கருத் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு;

பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்திற்கான (FRDI) கள விஜயம்

கருத் திட்டத்தின் தலைப்பு	பிரதான ஆய்வாளர்	சிபாரிசுக் குறிப்பு
அன்னாசிப் பழத்தின் அதிக விளைச்சல் மற்றும் நல்ல தரமான வித்தியாசமான கலப்பினங்களின் வளர்ச்சி	செல்வி ஐ. களுபோவில	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.





தோட்டக்கலை பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்திற்கான (HORDI) கள விஜயம்

கருத் திட்டத்தின் தலைப்பு	**பிரதான ஆய்வாளர்**	**சிபாரிசுக் குறிப்பு**
இலங்கையில் தேர்ந்தெடுத்த மரக்கறி பயிர்களில் முக்கிய வேர்-முடிச்சு நூற்புழுக்களை (*Meloidogyne spp.*) கட்டுப்படுத்த பயனுள்ள மற்றும் திறமையான எதிர்வினை பாக்டீரியாக்களை தனிமைப்படுத்துதல் மற்றும் திசு வளர்ப்பு	திரு. கே. எம். டீ. டப்ளியூ. பி. நிஷாந்த	ஒரு சில சந்தைப்படுத்தக் கூடிய பொருட்கள் தயாரிக்கப் பட்டுள்ளதால் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது
கெப்சிகத்தின் எண்டோபைடிக் பாக்டீரியா கூட்டங்கள் மற்றும் இலங்கையில் தாவர வளர்ச்சி மற்றும் ஆந்த்ராக்னோஸ் நோய் கட்டுப்பாடு அவற்றின் தாக்கம்.	திருமதி எம். எஸ். டப்ளியூ. பெர்னாந்து	தற்போதுள்ள முன்னேற்றம் சிறந்த நிலையில் காணப்படுவதால் கருத் திட்டத்தின் காலத்தை மேலும் 6 மாதங்கள் வரை நீட்டிக்க குழு சிபாரிசு செய்தது.
ஈர மற்றும் உலர் வலயத்தில் நிலையான பொசுபரசு நிறைந்த காய்கறி வளரும் மண்ணில் அவற்றைப் பயன்படுத்த குறித்த பொசுபரசு கரைக்கும் நுண்ணுயிர் (PSM) இனோகுலம்களை உருவாக்குதல்.	திருமதி கே. கே. கே. நவரத்தன	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால், கருத் திட்டத்தை நிறுத்திவிட்டு இரண்டாம் கட்டத்திற்கு செல்வதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.
இலங்கையின் சூழ்நிலையில் உருளைக் கிழங்கின் தாவர வளர்ச்சி, ஒருங்கிணைவு மற்றும் கிழங்கு விளைச்சல் ஆகியவற்றில் விவசாய மற்றும் தாவர பௌதீக அம்சங்களின் தாக்கத்தை ஆய்வு செய்தல்.	திருமதி டீ. பி கருணானந்தா	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால் கருத் திட்டத்தை முடிவுறுத்துவதற்கு சிபாரிசு செய்யப் படுகின்றது.
இலங்கையில் தக்காளியின் விதை மூலம் பரவும் பாக்டீரியா புற்று நோயை கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த மூலோபாயத்தை உருவாக்குதல்.	திருமதி டப்ளியூ. ஏ. பி. ஜி. வீரரத்ன	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால் கருத் திட்டத்தை முடிவுறுத்துவதற்கு சிபாரிசு செய்யப் படுகின்றது.





தாவர மரபியல் வள நிலையத்திற்கான (PGRC) கள விஜயம்

கருத் திட்டத்தின் தலைப்பு	பிரதான ஆய்வாளர்	சிபாரிசுக் குறிப்பு
பயிர்களின் மேம்பாட்டிற்காக இலங்கையில் தேர்ந்தெடுத்த பயிர் வன தொடர்புகளின் மரபணு வேறுபாடு பற்றிய மதிப்பீடு	கலாநிதி எஸ். கே. வாசல	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால் கருத் திட்டத்தை முடிவுறுத்துவதற்கு சிபாரிசு செய்யப் படுகின்றது.
விதை மரபணு களஞ்சியத்தில் நீண்ட கால பாதுகாப்பிற்காக ஹெர்மீடிக் நிலைமைகளின் கீழ் தேர்ந்தெடுத்த பயிர் வகைகளின் தீவிர உலர் விதைகளின் களஞ்சிய பண்பு	கலாநிதி எஸ். கே. வாசல	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால் கருத் திட்டத்தை முடிவுறுத்துவதற்கு சிபாரிசு செய்யப் படுகின்றது.
மூலக்கூறு (*Nilaparvatalugens*Stal (*Family; Delphacidae)* மற்றும் உருவவியல் தன்மை மற்றும் சென்நிற தாவர வெட்டுப் பூச்சிக்காக தேர்ந்தெடுத்த பாரம்பரிய நெல் கல்ட்டிவாசுகளின் விளைச்சல் எதிர்ப்பு அணுக்கருவில் மரபணுக்களை அடையாளம் காணுதல்	திருமதி டீ. எஸ். கெக்குலந்தர	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால் கருத் திட்டத்தை முடிவுறுத்துவதற்கு சிபாரிசு செய்யப் படுகின்றது.

உணவு ஆராய்ச்சி அலகுக்கான (FRU) கள விஜயம்

கருத் திட்டத்தின் தலைப்பு	பிரதான ஆய்வாளர்	சிபாரிசுக் குறிப்பு
பழம் மற்றும் காய்கறி சாறு பதனிடும் செயன்முறையில் புதுமைகளின் பிரயோகம்: சீனி அடங்காத பழங்கள் மற்றும் காய்கறிகள் இணைந்த கருமையான கலவை சாறு தயாரிப்புகளை தயாரித்தல் மற்றும் பாதுகாத்தல் பற்றிய ஆய்வு	கலாநிதி சி. கே. டீ. வெல்லெல	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.

இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்திற்கான (NRMC) கள விஜயம்

கருத் திட்டத்தின் தலைப்பு	பிரதான ஆய்வாளர்	சிபாரிசுக் குறிப்பு
மிளகாயின் ***Capsicum annuum***) வித்தியாசமான வளர்ச்சி நிலைகளில் போஷனை தேவையை கரிம உரத்திலிருந்து வெளியாகும் போஷனையின் ஒத்திசைவும் மற்றும் வித்தியாசமான கரிம உரங்களின் சிதைவும் மற்றும் போசனைப் பதார்த்தங்கள் வெளியாகும் விதமும்	கலாநிதி ஏ. ஜி. எச். சந்திரபால	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.
திறமையான புவியீர்ப்பு குழாய் நீர்ப்பாசன முறைகளின் மூலம் மத்திய / மலைநாட்டு இடைவெப்ப நிலைய வலயத்தில் நீர் பற்றாக்குறையுள்ள சாய்வான நிலங்களின் நீர் விளைபயன் மற்றும் நில மேம்பாடு	திரு சி. கே. விக்ரமதுங்க	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.

தானிய பருப்பு மற்றும் எண்ணெய் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கான (GLORDC) கள விஜயம்



கருத் திட்டத்தின் தலைப்பு	பிரதான ஆய்வாளர்	சிபாரிசுக் குறிப்பு
அக்ரா இனத்தை சேர்ந்த கோழிக்கூட்டு வாழைப் பழத்தின் தரம் மற்றும் அறுவடைக்குப் பின் பழுதடையாமல் பாதுகாப்பது பற்றிய அறுவடைக்குப் பிந்தைய ஜிபரலிங் பிரயோகத்தின் தாகத்தை மதிப்பிடுதல்	திருமதி ஐ. ஆர். லியனகே	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால் கருத் திட்டத்தை முடிவுறுத்துவதற்கு சிபாரிசு செய்யப் படுகின்றது.
இலங்கையின் உலர் வலயத்திற்கு பொருத்தமான புறாப் பருப்பு இனங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் விவசாயிகளுக்கான விவசாய பொதியை உருவாக்குதல்	திரு எஸ். டீ. சேனரத் யாப்பா	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.
சோளம் பயிரிடப்படும் செம்பழுப்பு மண்ணில் பௌதீக, நீர் வெப்ப பண்புகள் மற்றும் கோன் கொப் பைக்கார் மற்றும் உமி ஆகியவற்றின் தனிப் பிரயோகத்தின் நீண்டகால தாக்கம்	திரு எஸ். ரீ. முணசிங்க	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.
ஜம்போ வேர்க்கடலைக்கான நடுத்தர கால நிலக்கடலை (*Arachishypogaea* L.) வகைகளை உருவாக்குதல்	திரு வை. பி. ஜே. அமரசிங்க	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால்

		கருத் திட்டத்தை முடிவுறுத்துவதற்கு சிபாரிசு செய்யப் படுகின்றது.
இலை மற்றும் காய் உற்பத்திக்கான முருங்கை (*Moringaoleifera*) வகைகளை உருவாக்குதல்	திரு டீ. வீரசேக்கர	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால், கருத் திட்டத்தை நிறுத்திவிட்டு இரண்டாம் கட்டத்திற்கு செல்வதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.
இலங்கையின் தாழ்நாட்டு உலர் வலயத்தில் உண்மையான விதை உற்பத்திக்கு மிகவும் பொருத்தமான கொத்து வெங்காய நிரல்களை உருவாக்குதல்	திரு இ. கே. இ. சி. நயனா	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.
இலங்கையின் நிலைமைகளுக்கு ஏற்ற அதிக விளைச்சலை தரும் கறுப்பு விதை எள்ளு/களின் வளர்ச்சி	கலாநிதி யூ. ஐ. பி. பெரேரா	தற்போதுள்ள முன்னேற்றம் சிறந்த நிலையில் காணப்படுவதால் கருத் திட்டத்தின் காலத்தை மேலும் ஒரு மாதம் வரை நீட்டிக்க குழு சிபாரிசு செய்தது.
இறக்குமதி செய்த டங்கரைனுக்குப் பதிலாக இலங்கை டங்கரின் (ஹீன்னாரன்) வகைகளை சிபாரிசு செய்து அவற்றை மதிப்பிடுதல்	திரு டப்ளியூ. ஏ. விஜித்தவர்ண	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.
இலங்கையில் புளியையும் மற்றும் இனிப்பு புளியையும் சேகரித்தல், பழுதடையாமல் பாதுகாத்தல், மதிப்பீடு செய்தல், பரிந்துரைத்தல் மற்றும் வணிகமயமாக்கல்	திரு டப்ளியூ. ஏ. விஜித்தவர்ண	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.

பேராதெனிய பல்கலைக் கழகத்திற்கான (UOP) கள விஜயம்

கருத் திட்டத்தின் தலைப்பு	**பிரதான ஆய்வாளர்**	**சிபாரிசுக் குறிப்பு**
இலங்கையின் உலர் வலயத்தில் தேர்ந்தெடுத்த பயிர் செய்யப்பட்டுள்ள தேர்ந்தெடுத்த வயல்களில் மண் நீரியல் மற்றும் வெப்ப இயக்கவியலில் காலநிலை மாற்றம் ஆகியவற்றின் தாக்கங்களை கண்டறிதல்.	கலாநிதி துமிந்த நயனாக்க விதான கமகே	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.
அனுராதபுரம் மாவட்டத்தில் மேற்பரப்பு மண்ணில் நச்சுத்தன்மையுள்ள சுவடு கூறுகளின் நிலை: அடிப்படை செறிவு, இடப் பரவல் மற்றும் அரிசிக்கான பைட்டோவின் கிடைப்புத் தன்மை.	கலாநிதி ஏ. எம். சி. பி. கே. அத்தநாயக்க	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால், கருத் திட்டத்தை நிறுத்திவிட்டு இரண்டாம் கட்டத்திற்கு செல்வதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

வயல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்திற்கான (FCRDI) கள விஜயம்

கருத் திட்டத்தின் தலைப்பு	பிரதான ஆய்வாளர்	சிபாரிசுக் குறிப்பு
இலங்கையின் உலர் வலயத்தில் வறண்ட காலங்களில் தாழ்நில நெல் வயல்களின் கீழ் தீவனப் பயிர்களை பயிரிடுவதற்கான விவசாய முகாமைத்துவ பொதியை தயாரித்தல்.	கலாநிதி எம். ஏ. பி. டப்ளியூ. கே. அலவிஆராச்சி	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.
குறுகிய கால முங்பீன் மஞ்சள் மொசைக் வைரஸ் மற்றும் நுண்துகள் பூஞ்சை காளான் எதிர்ப்பு உளுந்து (*Vignamungo* L) மரபு வழிகளை இனங்காணுதல் மற்றும் அவற்றின் நோய் எதிர்ப்பு பாரம்பரிய முறைகள்.	திருமதி எம். ஜே. எம். பி. குமாரரத்ன	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.





அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்திற்கான (RRDI) கள விஜயம்

கருத் திட்டத்தின் தலைப்பு	பிரதான ஆய்வாளர்	சிபாரிசுக் குறிப்பு
இலங்கையின் வெவ்வேறு மாவட்டங்களில் களை கட்டும் திறனை மேம்படுத்த நேரடி விதை நெல்லில் (DSR) ஒருங்கிணைந்த களை கட்டுப்பாட்டு அணுகுமுறைகள்.	கலாநிதி எச். எம். எஸ். ஹேரத்	கருத் திட்டங்களின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளதால், கருத் திட்டத்தை நிறுத்திவிட்டு இரண்டாம் கட்டத்திற்கு செல்வதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.
இலங்கையில் நேரடியாக விதைத்த அரிசியில் தானியங்களை நிரப்பும் கட்டத்தில் பொட்டாசியத்தினதும் மற்றும் நீரினதும் பயன்பாட்டுத் திறனை அனுகூலப்படுத்துவதன் ஊடாக அரிசியின் உற்பத்தியை அதிகரித்தல்.	கலாநிதி ஐ. டப்ளியூ. எம். ஐ. டப்ளியூ. ரீ. கே. இல்லங்ககோன்	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.
நெல்லின் உற்பத்தித் திறனை மேம்படுத்த நாவல் உருவ-பௌதீக பண்புகள் பற்றிய ஆய்வு.	திரு எல். சி. சில்வா	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.

அரிசியில் காதல்-மிஜ் எதிர்ப்பை வளர்க்க புதுமையான இனப்பெருக்க சாதனங்களின் பயன்பாடு.	திருமதி டப்ளியூ. ஏ. ஆர். தம்மிக்க	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.
உலர் நேரடி விதைப்பு மற்றும் வறட்சி சகிப்புத்தன்மை ஆகியவற்றின் நிமித்தம் அரிசி மரபணு வகைகளின் பினோடைப்பிங் மற்றும் இலக்கு மரபணு வெளிப்பாடு பற்றிய ஆய்வு.	கலாநிதி டீ. எம். ஜே. பீ. சேனாநாயக்க	கருத் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது.





2022 ஆம் ஆண்டில் நடத்திய வேலையரங்குகள் மற்றும் மாநாடுகள்

NARS கொள்கை ஆக்கும் தரப்புகள், திறைசேரி ஆகியவற்றுடனான வருடாந்த கலந்துரையாடல்



உரிய அமைச்சுக்களின் அதிகாரிகள் மற்றும் தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் தலைவர் ஆகியோருடனான வருடாந்த கலந்துரையாடல் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி அன்று இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையில் நடைபெற்றது. தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையினதும், உரிய அமைச்சுக்களினதும், விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையினதும் உறுப்பினர்கள் என இந்த கலந்துரையாடலில் 49 நபர்கள் கலந்து கொண்டனர். தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் விஞ்ஞானிகளும், உரிய அமைச்சுக்களின் அதிகாரிகளும், விவசாயத் திணைக்களத்தின் மூலம் பொருளாதாரம் மேம்படுத்தப்படுவதற்கான விவசாய ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தையும் மற்றும் விவசாய ஆராய்ச்சி தொடர்பாக தற்போதுள்ள பிரச்சினைகளையும் கலந்துரையாடும் வகையில் ஒரு தளத்தை உருவாக்குவதே இந்த கலந்துரையாடலின் நோக்கமாகும். கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு முன்னர், தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமைகளின் எதிர்கால போக்குகள், தற்போதைய சூழ்நிலையில் விவசாய ஆராய்ச்சிகளின் முக்கியத்துவம், தற்போதைய அரசாங்கத்தின் விவசாய ஆராய்ச்சிக் கொள்கை மற்றும் தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கையின் கொள்கை போக்குகள் என்பன தொடர்பாக விழிப்பூட்டும் முகமாக நான்கு விளக்க சமர்ப்பணங்கள் நிகழ்த்தப்பட்டன.

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையின் தலைவர் பேராசிரியர் காமினி சேனாநாயக்க, பங்குபற்றிய நபர்களை வரவேற்று கலந்துரையாடலின் நோக்கங்கள் பற்றி விளக்கினார். பின்னர் பேராசிரியர் சேனநாயக்க "தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் (NARS) எதிர்கால திசைகள்" என்ற தலைப்பில் தனது விளக்க சமர்ப்பண உரையை நிகழ்த்தினார். கமத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி டப்ளியூ. எல். காமினி சமரசிங்க, உணவுப் பாதுகாப்பின்மையைப் போக்க விவசாய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதிலும் மற்றும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு ஏற்றுமதி சந்தையை உருவாக்குவதிலும் காணப்படுகின்ற முக்கியத்துவம் பற்றியும் தெளிவுபடுத்தினார். நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர். எச். டப்ளியூ. ஏ. குமாரசிறி அவர்கள், நாட்டின் நிதி பகிர்ந்தளிப்பின் தற்போதைய நிலை பற்றி விளக்கினார். விவசாய ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை திறைசேரி கண்டறிந்துள்ளது. ஆகையால் அந்த ஆராய்ச்சிக் கருத் திட்டங்களுக்கு நிதியளிக்கும் வழிமுறையை எற்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். நன்கொடையாளர் நிறுவனங்களுடன் கலந்துரையாட விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாளர்

நிதியுதவி திட்ட முன்மொழிவுகளை பெற்று சமர்ப்பிக்குமாறும் மேலும் கேட்டுக் கொண்டார். இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையின் சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி (திருமதி) எஸ். எம். பி. சந்திரா பத்மினி, தேசிய ஆராய்ச்சி கொள்கை பற்றிய வழிகாட்டல்கள் மற்றும் தேசிய மட்டத்தில் அந்த ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை செயல்படுத்துதல் ஆகியன பற்றி சமர்ப்பண மூலம் விளக்கினார். இந்த விளக்க சமர்ப்பண உரையின் பின்னர், உரிய அக்கறையுடைய தரப்புகளுடனான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது. NARS இன் அதிகாரிகள் தமது நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை செயல்படுத்துவதற்கு மனித வளங்களின் பற்றாக்குறை, விஞ்ஞான உபகரணங்கள் இல்லாமை மற்றும் போதிய நிதியின்மை என்பன கடும் பிரச்சினைகள் என குறிப்பிட்டனர். கூட்டம் பிற்பகல் 1.45 மணியளவில் நிறைவடைந்தது. இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையின் SRO திரு. சமீர திசாநாயக்க நன்றியுரையை நிகழ்த்தினார்.

மலர் வளர்ப்பு ஆராய்ச்சி பற்றிய தேசிய மாநாடு - 2022




இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையும் தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களமும் ஒன்றிணைந்து, இந்தத் துறையில் அண்மைகால ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை முன்னிலைப் படுத்தவும் மற்றும் கலந்துரையாடவும் 2022 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 22 ஆம் திகதி ஒரு கலப்பு கருத்தரங்காக (ஒன்லைன் மற்றும் பௌதீக ரீதியில்) மலர் வளர்ப்பு ஆராய்ச்சிக்கான வருடாந்த தேசிய கருத்தரங்கை (NASFLOR-2022) ஏற்பாடு செய்திருந்தன. இதில் ஆராய்ச்சியாளர்கள், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோர் பங்குபற்றி இந்தத் துறையை மேம்படுத்த தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மலர் வளர்ப்புத் துறை பற்றிய பதினான்கு ஆய்வுக் கட்டுரைகள் ஆராய்ச்சியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் அவை பரப்புதல் மற்றும் விளைச்சல், புதுமைகள் மற்றும் போக்குகள் மற்றும் ஒளி, நிழல் மற்றும் ஒளிச்சேர்க்கை என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன. இந்தக் கருத்தரங்கில் சுமார் 150 அக்கறையுடைய தரப்புகள் கலந்து கொண்டனர். பேராதெனிய தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தினது பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஷெலோமிகிருஷ்ணராஜா கருத்தரங்குக்கு வருகை தந்திருந்தவர்களை வரவேற்றார். மலர் வளர்ப்புத் துறை பற்றிய தேசியக் குழு மற்றும் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை (இ வி ஆ கொ ச) ஆகியவற்றின் தலைவர் பேராசிரியர் திரு ரஞ்சித் சேனாரத்ன இந்த கருத்தரங்கின் நோக்கத்தை எடுத்துரைத்தார். பேராதெனிய பல்கலைக் கழகத்தினது விவசாய பீடத்தின் பேராசிரியர் சலிந்த பெனரகம இந்த கருத்தரங்கின் முக்கிய பேச்சாளராக கலந்து கொண்டார். இந்தத் துறையின் வாய்ப்புகள் மற்றும் போக்குகள் முதலிய விடயங்கள் பற்றி அவர் விளக்கினார்.

ஆற்றல் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித் திட்டம்




With the Secretariat in Colombo, SLCARP serves as an organization in an advisory capacity for co-coordinating and consolidating efforts within Sri Lanka NARS, funding research projects/programmers, and promoting scientific research linkages in prioritized areas both nationally and internationally. CARP has been instrumental in promoting and facilitating research, by improving and enhancing agricultural research through documentation and communicating the latest advances in research to the NARS scientists. SLCARP has identified its

own perspective, plans, and programs for the future in keeping with the aspirations and goals of the Ministry of Agriculture Development and Agrarian Services to meet the future challenges in enhancing domestic food production and exports focused on poverty reduction.

f) **Our Vision** - A vibrant and sustainable agricultural research, development, and innovation system assuring the socio-economic development of Sri Lanka.

g) **Our Mission** - To ensure agricultural research, development, and innovations are directed towards national development goals through policy formulation, facilitation, coordination, monitoring and evaluation, and impact assessment.

h) **Our Mandated Functions - SLCARP**

(1) To advise the Government on all matters regarding the organization, coordination, planning, and execution of agricultural research and such other related matters as may be referred to it by the Minister.

(2) To formulate national agricultural research policy and priorities.

(3) To define the overall aims and scope of agricultural research with a view to furthering national development objectives.

(4) To make recommendations to the appropriate authorities on the financial, manpower, and physical resources required by agricultural research institutions and establishments and on the terms and conditions of service of the staff of such institutions and establishments.

(5) To review Institutional and departmental agricultural research programs and make recommendations with regard to their priorities and funding to the Ministry of the Minister in charge of the subject of Finance and Planning.

(6) To promote and facilitate excellence in agricultural research.

(7) To act as a channel of communication between agricultural research institutions and the Government.

(8) To arrange for and fund inter-institutional agricultural research projects.

(9) To arrange for and fund special scientific services for the entire agricultural research sector.

(10) To promote linkage between agricultural research institutions at national and international levels.

(11) Organize conferences and seminars on international, national, and inter-Institutional issues relating to agricultural research.

(12) To arrange for the post-graduate training of agricultural research staff and for the interchange of scientists with recognized research institutions abroad.

(13) To review the performance of agricultural research projects, institutions, and divisions from time to time.

16.1.2. National Agricultural Research Plan (NARP-NUS)

The Sri Lanka Council for Agricultural Research Policy (SLCARP), is the Apex Body of the National Agricultural Research System and is charged with the major responsibility of an advisory role along with aiding, promoting, coordinating, and monitoring research, related to agriculture and allied areas in the country.

The National Agricultural Research Plan (NARP) is one of the main mandatory functions, of the Sri Lanka Council for Agricultural Research Policy with the objective of facilitating Agricultural research. The NARP projects are designed in accordance with the national research priority areas identified by Sri Lanka Council for Agricultural Research Policy. Currently, funds are provided mainly to the Department of Agriculture, and National Universities where agriculture-related research projects are carried out.

16.1.2.1 NARP-NUS (118-02-03-026-2507) - 2022	**Rs.**
Budget Allocation	20,000,000.00
Received funds from the Ministry of Agriculture	9,324,000.00
Expense during the year	(9,287,983.00)
Balance Transferred to the Ministry of Agriculture 31.12.2022	**36,017.00**

16.1.3. Capacity Building Programme

SLCARP identified the importance of the Human Resources Development of National Agriculture Research System (NARS) researchers. Thus, SLCARP submitted a proposal to the Ministry of Agriculture for Capacity Building of the Researchers of the NARS for which a Cabinet Memorandum was issued on 21 September 2017 under the heading of Directing of Researchers of the NARS for Foreign postgraduate degree training.

Under this program, NARS researchers have obtained opportunities to register Universities in India, Thailand Malaysia, and the Philippines. The number of Candidates who have received admission under the Capacity Building long-term training Programme of SLCARP during 2018 – 2022 is listed below.

Ongoing scholars of the Capacity Development Programme.

	No of Scholars
University Putra Malaysia - Malaysia	34
University of Philippines Los Banos – Philippines	17
University of the Philippines Diliman – Philippines	01
Total	**52**

Completed scholars of the Capacity Development Programme.

	No of Scholars
University Putra Malaysia - Malaysia	06
University of Philippines Los Banos – Philippines	09
Kasetsart University – Thailand	03
Asian Institute of Technology (AIT) – Thailand	03
Chaudhary Charan Singh Haryana Agricultural University – India	01
Kerala Agricultural University– India	01
C S K Himachal Pradesh KrishiVishvavidyalaya – India	01
Prof. Jayasankar Telangana State Agricultural University– India	01
Acharya N.G Ranga Agricultural University – India	01
Total	**26**

Discontinued Scholar of the Capacity Development Programme.

	No of Scholars
University of Philippines Los Banos – Philippines	01
Total	**01**

16.2.1 Accounting Policies and Concepts;

Accounting policies consist of principles, bases, conventions, rules and procedures, and also Accounting concepts are ideas and assumptions which are fundamental to accounting practices. Therefore some of our accounting concepts are as follows.

16.2.2 Basis of measurement

The financial statements have been prepared on a historical cash basis. No adjustment has been made for inflationary factors in the financial statement.

16.3 Functional and presentation of currency

The financial statement for the year end 2022 was presented in Sri Lankan rupees (LKRs.) and nearest cents.

However, we have decided to present our Financial Statement in LKRs. And round to the nearest rupee which is effective from the financial year January 01st 2011 and ahead. The year 2022 was presented in LKRs. and rounded to the nearest rupee.

The stipend and Expense fees relating to the Capacity Building program are paid in USD ($) where that Expense is converted to LKR at the spot rate of the transaction date and prepaid the stipend and University fees are taken into financial statements at the rate of Balance sheet rate. The difference arising due to changes in the Exchange rate has been taken into financial statements as exchange gain or Loss.

16.4 Accounting for Govt. Grants disclose of Govt. Assistance

(a) Accounting for Government Grants & Disclosure of Government Assistance is adopted.

(b) We further say, that accounting policy had been adopted with regard to the government grants was the method of capital approach but that government grant was related to the fixed assets it had been taken to the accounts under the method of the income approach.

(c) A Deferred Income Fund has been identified only in respect of the assets purchased since 2018.

16.4.1 Capital Grants (Treasury Grants Research)

According to the Sri Lanka Council for Agricultural Research Policy Act No.14 of 1987, all the Grants received need to be credited to CARP Fund and all the expenses need to be done out of that. In that Sense Capital Grants (Treasury Grants Research) need to be considered as a supplementary Note to the CARP Fund and the remaining balance need to be reflected in the CARP Fund each Year. Then only Carp Fund will be remaining as an Equity Fund in the Statement of Financial Position.

16.4.2 Research Management Activities

Generally, the Capital Fund is utilized to Research Management Activities where the requirements of LKAS 38 for Intangible assets are not complied with. Hence the Research management activities are in a nature where that could not be capitalized. Due to that reason both the expense and amount of Funds are shown in the Comprehensive Income Statement in order to reflect the effect.

17. 1. VALUATION OF ASSETS

1.1 Property Plant & Equipment

Property plant & equipment are on the balance sheet at cost less accumulated depreciation and is provided on the straight-line method at the following rates per annum.

a)	Building	05%
b)	Computer & printers	30%
c)	Computer Software	30%
d)	Office Equipment	15%
e)	Office Furniture	15%
f)	Vehicles	25%
g)	Road	05%
h)	Library Book	05%
j)	Electronic Data	30%

1.2 Trade & Other Receivables

Trade & Other Receivables incurred Staff Debtors, Unsettled Research Imprest, Deposits, Prepayment, Income receivable & Project receivables.

1.3 Composition of EPF & ETF rates;

	Employer	Employee	Total
EPF	15%	10%	25%
ETF	03%	-	03%

1.4 Unsettled Research Imprest

The research imprest has been given to various research Institutes/ Universities in Sri Lanka. However, some of the research institutes/ Universities do not settle this research imprest at the year-end such an amount is stated as an unsettled research imprest and the council noted advised to take the necessary step to settle this unsettled amount.

1.5 Stocks

Stocks are shown in the financial statement at lower market value or purchase price. The stock is valued using the FIFO method. The Non Consumables are classified as stock items based on the nature of that category which was previously presented in the Property plant and equipment. The Depreciation provided so far is reversed back to Prior Year Adjustments.

1.6 Gratuities

A provision has been made according to regulations 5 of the Gratuity Act. No.12 of 1983 in respect of employees eligible under the Act.

1.7 Receivable Deposits

Values of refundable and receivable deposits are named as follows;

A. W. Ranasinghe (Filling Station - Kollupitiya)
Postgraduate Institute of Management - Library
Sri Lanka Telecom – IDD

1.8 Other Disclosures.

1.8.1 Pending TT amount of University Putra Malaysia.

The amount of 10,294.24 USD has been transferred to the beneficiary University Putra Malaysia as the University fee of scholars and it was transferred on 27.12.2022. the bank paid twice due to bank error and transferred the aforesaid amount again to the beneficiary University Putra Malaysia on 30.12.2022. The bank is functioning to recover from the concerned institution.

2.0 Ownership of the Building SLCARP

The request has been made to the Secretary Ministry of Agriculture to clear the ownership of the land and building which is used by the SLCARP.

2.1 Pending Litigation and investigation of the SLCARP

2.1.1 Pending Litigation of Mr. W.M.D. B. Abyerathne.

The Council noted the present status after the disciplinary inquiry - Mr. W.M.D. B. Abyerathne, Former Accountant, SLCARP. In addition, the council approval was also granted to hand over the case against Mr. W.M.D. B. Abyerathne to Attorney General to cover Rs. 587, 418 the amount which is to be recovered from him.

2.1.2 CARP ICRAF Tree Domestications Project.

In 2015, after coming to know about the current account number 232246 maintained at the Bank of Ceylon Torrington branch under the name CARP ICRAF Tree Domestications Project under the Sri Lanka Agricultural Research Policy Council, the SLCARP informed the bank and it was suspended on 21.08.2015. SLCARP has the account, which has been handed over to the Criminal Investigation Department of Sri Lanka for further investigation of this current account. The report of the investigation has not been received, and there is a Rs. 1,232,754.67 balance in the account as of 31.12.2022.

Our Corporate Information

As at 31st of December 2022

Name of the State Owned Enterprise

Sri Lanka Council for Agricultural Research Policy

Ministry

Ministry of Agriculture

Secretary to the Ministry

Mr. Gunadasa Samarasinghe

Classification of General Treasury (PED /COP/POLI/Circular-17.06.2015)

Budgetary Funded – Research and Development Agencies/ Entities established under an Act. of Parliament to perform research and development activities for the benefit of the National Economy or in the wider interest of the public are deemed as Research and Development Agencies.

Supervision and Monitoring Role Managed by

Department of Public Enterprises (PED)

Carder Supervision & Corporate Plan Managed by

National Salaries and Carder Commission / Department of Management Services (MSD)

and

Department of Public Enterprises (PED)

Annual Budget and Action Plan Managed by

Department of National Budget

Governed by

The Council of Sri Lanka Council for Agricultural Research Policy

Head of the Council

Secretary / Director

Legal Form

Incorporated Under the Parliament Act.

Sri Lanka Council for Agricultural Research Policy Act, No. 47 of 1987

Registered Office

No.114/ 09, Vidya Mawath , Colombo -07

Sri Lanka

Telephone Numbers

+94-11-2697103, 2697648, 2698001, 2685688, 2665076, 2665077, 665517

Fax Number

0094 – 11 – 2982951

E-mail - slcarp.agri@gmail.com

Our Website - www.slcarp.lk

Auditors to the SL CARP

Auditor General

Secretary to the Council / Head of the Department

Secretary / Director

Bankers

Bank of Ceylon –Supper Grade Branch, Independence Square, Colombom07, Sri Lanka.

- **Current A/C No. 2323310**
- **Swift Code BCEYLKLX, Bank Code 7010, Branch Code 453**
- **Telephone Number 0094 - 11-2692506**

Lawyers to the SL CARP

Attorney General, AG's Department, Colombo 01, Sri Lanka.

Auditor's Comment

ශ්‍රී ලංකා කෘෂිකාර්මික පර්යේෂණ ප්‍රතිපත්ති සභාව

2018 සිට 2022 වර්ෂය දක්වා අයවැය තොරතුරු

වර්ෂය	2018		2019		2020	
විස්තරය	පුනරාවර්ථන	ප්‍රග්ධන	පුනරාවර්ථන	ප්‍රග්ධන	පුනරාවර්ථන	ප්‍රග්ධන
මුළු අයවැය ඇස්තමේන්තුව	353,761,221.28	189,500,000.00	287,550,000.00	40,000,000.00	366,000,000.00	23,000,000.00
අනුමත අයවැය	350,000,000.00	35,000,000.00	200,000,000.00	30,000,000.00	204,500,000.00	1,000,000.00
මුදල් ලැබීම්	112,584,500.00	14,350,000.00	168,350,300.00	15,000,000.00	164,482,000.00	1,000,000.00
මුළු වියදම්	84,153,907.00	14,945,548.00	173,238,521.45	16,192,602.90	154,417,863.85	999,087.00

වර්ෂය	2021		2022	
විස්තරය	පුනරාවර්ථන	ප්‍රග්ධන	පුනරාවර්ථන	ප්‍රග්ධන
මුළු අයවැය ඇස්තමේන්තුව	214,395,700.00	75,644,000.00	209,575,000.00	82,545,000.00
අනුමත අයවැය	200,000,000.00	40,000,000.00	200,000,000.00	20,000,000.00
මුදල් ලැබීම්	111,487,100.00	13,480,000.00	130,510,000.00	8,100,000.00
මුළු වියදම්	111,143,791.00	13,235,506.40	118,241,333.00	4,975,381.00

පිළියල කලේ

පරීක්ෂා කලේ

Summary of the Recommendations

Made at the Audit and Management Committee Meetings conducted in year 2023

Composition of the Audit & Management Committee in year 2022.

Audit & Management Committee:

1. Ms. B.A.N Harshani Perera – Chairman of the Committee, / Deputy Director, Department of National Planning - Ministry of National Policies and Economics Affairs. (65th & 66th Meetings)

2. Dr. S.H.S Ajantha De Silva – Member, AMC /Director General, Department of Agriculture (65th meeting)

3. Dr. H.M.P Kithsiri – Member, AMC / Director General, National Aquatic Resources Research and Development Agency (65th meeting)

4. Dr. W. L. G. Samarasinghe, – Member, AMC / Additional Secretary (Agric. Tech), Ministry of Agriculture (66th meeting)

5. Mr. Chithral Jayawarna, – Member , AMC / Chief Manager, Sri Lanka Port Authority (66th meeting)

By Invitation:

1. Ms. W.S Bopegamage - Audit Superintendent / Agriculture Insurance Board
2. Mr. E.W.G.K Priyadarshana - Chief Internal Auditor / Ministry of Agriculture

On Call:

1. Dr. P.H.P.C Girihagama - Deputy Director (Research Management), SLCARP
2. Mrs. R.Y.M.P Ranathunga - Assistant Director (Administration), SLCARP

Numbers of Meetings Convened with Duties:

65th Audit & Management Committee Meeting - 20th September 2022

66th Audit & Management Committee Meeting – 30th December 2022

All recommendation of the Audit & Management Committee Meetings held have been submitted to the council for SLCARP.

Recommendations made at the Audit & Management Committee Meetings:

Papers submitted at the 65th AMC Meeting	Submission Requirements		Action By
	Information	Recommendation	
Confirmation of Minutes of the 64th AMC Meeting	Submitted for Information	-	Secretary
The Financial Progress month of January to August 2022	Submitted for Information	-	Secretary
කෘෂිකර්ම අමාත්‍යාංශයේ අභ්‍යන්තර විගණන අංශය විසින් නිකුත් කල කළමනාකරණ විගණන වාර්තා	-	Submitted for Recommendation	Secretary
2021 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ විගණකාධිපති විගණන වාර්තාව.	-	Submitted for Recommendation	Secretary
General Audit Quarries and Answers	Submitted for Information	-	Secretary
2021 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා මූල්‍ය ප්‍රකාශන සම්බන්ධයෙන් වූ විස්තරාත්මක විගණකාධිපති විගණන වාර්තාව	-	Submitted for Recommendation	Secretary
රාජ්‍ය ව්‍යවසාය චක්‍රලේඛ අංක PED 01/2015 රජයට අයත් සමාගම් ව්‍යවස්ථාපිත මණ්ඩල හා වාණිජ සංස්ථා වල නිලධරයන් හට ප්‍රවාහන හා ඉන්ධන දීමනාව යටතේ ගෙවූ මුදල් නැවත අයකර ගැනීම	-	Submitted for Recommendation	Secretary
Revised Recurrent Budget - First and Second Quarter 2022	-	Submitted for Recommendation	Secretary
Write-off Receivable Balance Continuing in the Financial Statement.	-	Submitted for Recommendation	Secretary
Payable Balance Continuing in the Financial Statement.	-	Submitted for Recommendation	Secretary
ශ්‍රී ලංකා කෘෂිකාර්මික පර්යේෂණ ප්‍රතිපත්ති සභාව විසින් ක්‍රියාත්මක කළ ගිවිසුම් ගත පර්යේෂණ සඳහා (Contract Research) ලබා දුන් අත්තිකාරම් මුදලින් තව දුරටත් නොපියවූ 422,662.47 ක ශේෂය සම්බන්ධව.	-	Submitted for Recommendation	Secretary
Estimate SLCARP Budget Forecasting - 2023	-	Submitted for Recommendation	Secretary
වසා දමන ලද ලංකා බැංකු කොල්ලුපිටිය ශාඛාවේ ගිණුම් අංක 1632497 දරන (Project Management Unit) ගිණුමේ පවතින රු. 98,234.70 ශේෂය සම්බන්ධවයි.	-	Submitted for Recommendation	Secretary

Papers submitted at the 66th AMC Meeting	Submission Requirements		Action By
	Information	Recommendation	
Confirmation of Minutes of the 65th AMC Meeting	Submitted for Information	-	Secretary
Matters Rising from the Minutes	Submitted for Information	-	Secretary
The Financial Progress	Submitted for Information	-	Secretary
කෘෂිකර්ම අමාත්‍යාංශයේ අභ්‍යන්තර විගණන අංශය විසින් නිකුත් කල කළමනාකරණ විගණන වාර්තා	-	Submitted for Recommendation	Secretary
Delegation of Financial Authority Limits - 2023.	-	Submitted for Recommendation	Secretary
Revised Recurrent Budget – 4th Quarter 2022	-	Submitted for Recommendation	Secretary
Revised Capital Budget - 2023	-	Submitted for Recommendation	Secretary

My No. ARI/C/SLCARP/1/22/10/FA

திகதி: - 2023 மே 29

தலைவர்

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையின் 2022 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி வெளியிடும் கணக்காய்வு அறிக்கை

குறித்த அறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

டப்ளியூ. பி. சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

பிரதிகள்:-

(1) செயலாளர் - கமத்தொழில் அமைச்சு
(2) செயலாளர் - நிதி, பொரளாதார நிலைப்படுத்தல், தேசிய கொள்கைகள் அமைச்சு

My No. ARI/C/SLCARP/1/22/10/FA

திகதி: - 2023 மே 29

தலைவர்

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையின் 2022 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி வெளியிடும் கணக்காய்வு அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையின் 2022 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள நிதி நிலைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முழுமையான நிதிக் கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் கூற்று மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் சுருக்கமான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடங்கிய 2022 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றுக்கள், இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் அரசியலமைப்பினது 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை சட்டத்தினதும் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தினதும் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டிய எனது கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது கணக்காய்வின் முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்படும் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, சபையின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2022 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதி நிலையும் மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி சார் செயலாற்றுகையும் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்களும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 28,766,620 ரூபா செலவிலான 5 வகையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் கணக்கிடப்பட்டிருந்தன. அவ்வாறிருந்தும் இன்னும் அவை பாவனையில் ஈடுபடுத்தப்பட்டு வந்திருந்தன. இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் பிரகாரம் அத்தகைய நிலையான சொத்துக்களின் பயனுள்ள பாவனை காலம் வருடாந்த ரீதியில் மீளாய்வு

செய்யப்படாததால் மதிப்பிடப்பட்டுள்ள பிழையை இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தி நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாய வன வளர்ப்பு ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையத்திற்கும் (ICRAF) மற்றும் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டிருந்த ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான, தொழில் நுட்ப கூட்டுறவு ஆகியவற்றுக்கான 'விவசாய வன வளர்ப்பு' பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இணங்க ஆரம்பித்த CARP-ICRAF Tree Domestication என்ற கருத் திட்டத்திற்கு பெற்ற JW-3904 ஆம் இலக்க வாகனம் அந்த கருத் திட்டத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டு இருந்தாலும், உரிய கருத் திட்டம் முடிவடைந்த பின்னர், இந்த ஆராய்ச்சி கொள்கை சபைக்கு உரிமை மாற்றி பெற்றுக் கொள்ளப்படாமல் அன்று ஒருங்கிணைப்பு விஞ்ஞானியாக பணியாற்றிய தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்ற ஒரு சிரேஷ்ட பேராசியரினால் தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரையான காலப் பகுதியில் பட்டப்பின்படிப்பின் நிமித்தம் வெளிநாடு சென்றிருந்த தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் 25 ஆராய்ச்சியாளர்கள் கொவிட்-தொற்று நோய் நிலவியதால் இந்த கொள்கை சபைக்கு அறியப்படுத்தாமல் இந்த நாட்டிற்கு வந்திருந்திருந்தாலும், அந்த காலப் பகுதிற்கு செலுத்தியிருந்த 10,049,580 ரூபா தங்கல் கொடுப்பனவு மீளறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைக்கான சபைக்கு தற்போதுள்ள கட்டிடத்திற்கு மேலும் ஒரு பாகத்தை சேர்த்துக் கொள்ளும் பொருட்டு அந்த நிர்மாண ஒப்பந்தம் 2019 ஆம் ஆண்டில், பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 12,945,000 ரூபா செலவில் மதிப்பிடப்பட்டு 12,300,000 ரூபாவுக்கு கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதனுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி, வேலைகைளை நிறைவு செய்ய வேண்டியிருந்த நாள் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியாக இருந்தாலும், அந்த வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆம் திகதிற்கு உறுதிப்படுத்திய வேலைகளின் பெறுமானம் 5,516,590 ரூபாவாக இருந்தாலும், அதற்கு 12,217,303 ரூபா பணம் செலுத்தப்பட்டு இருந்ததால் உறுதிப்படுத்தப்படாத வேலைகள் நிமித்தம் 6,700,713 ரூபா மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) விவசாய வன வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையம் (ICRAF) மற்றும் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை ஆகியவற்றுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட ஆராய்ச்சி விஞ்ஞான கூட்டுறவுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 'விவசாய வன வளர்ப்பு' தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு கென்யா ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து கிடைத்து இலங்கை வங்கி டொரிங்டென் கிளையில் உள்ள 2323246 ஆம் இலக்க கருத் திட்ட வங்கிக் கணக்கில் இருந்த 1,232,755 ரூபா நிதி உதவி நிலுவைத் தொகை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) விவசாய ஆராய்ச்சி செயற்பாடுகளின் நிமித்தம் 3 விவசாய ஆராய்ச்சி நிறுவகங்களுக்கும் மற்றும் 3 பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கப்பட்ட நிதிகளில், எஞ்சியுள்ள 459,131 ரூபா இது வரை இந்த சபைக்கு பெற்றுக் கொள்ளப்படாமல் 2006 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் முன்-கொணரப்பட்டிருந்தது.

(எ) விவசாய ஆராய்ச்சி கொள்கைக்கான சபையின் முன்னாள் தலைவரின் பதவி காலம் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி முடிவடைந்து இருந்தும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை ஏறக்குறைய இரண்டு மாத காலத்திற்கு 197,600 ரூபா பணம் சம்பளமாகவும் கொடுப்பனவாகவும் செலுத்தப்பட்டிருந்தும் அந்த பணத் தொகையை அறவிடுவதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ. க. நி.) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமத்தின் கீழ் காணப்படுகின்ற எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விவரிக்கப் பட்டுள்ளது.

1.3 விவசாய கொள்கைக்கான சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள்

இந்த கணக்காய்வு திகதியின் பின்னர் எனக்கு வழங்கப்படும் என நம்புகின்ற விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட**,** ஆனாலும் நிதிக் கூற்றுக்களிலும் அவை தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையிலும் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது அபிப்பிராயத்தில் ஏனைய பிற தகவல்கள் உள்ளடங்காது. மேலும் அது சம்பந்தமாக எந்த விதத்திலும் நான் எந்த ஒரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்த அல்லது உறுதிசெய்யவில்லை.

மேற்கூறிய இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கு முரணாக உள்ளனவா அல்லது கணக்காய்வில் பெற்ற எனது அறிவுக்கு எட்டிய வகையில் அல்லது வேறு எந்த வகையிலும், அந்த தகவல்களை வாசிக்கும், அவ்வாறு செய்யும்போது முரணாக உள்ளனவா என கருத்திற் கொள்வது, நிதிக் கூற்றுக்கள் மீது நான் செய்ய வேண்டிய எனது கணக்காய்வு பொறுப்பாகும்.

சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது, அந்த அறிக்கையில் போதுமான பிழைகள் காணப்படுவதை அவதானிக்கும் பட்சத்தில் அவற்றை கட்டுப்பாட்டில் இருக்கும் தரப்பினருக்கு என்னால் தெரியப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறான பிழைகள் மேலும் திருத்தப் படாமல் இருப்பதாக கண்டறியப்பட்டால், அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் ஏற்பாட்டின்படி என்னால் உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள எனது அறிக்கையில் அந்த விடயங்கள் உள்ளடக்கப் படும்.

1.4. நிதி அறிக்கையின் மீது கட்டுப்பாடுள்ள தரப்புகளின் பொறுப்புகள்

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான கண்ணோட்டத்தை பிரதிபலிக்கும் வகையில் பிறழ்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது பிழைகள் இன்றிய நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையை தொடர்ந்து நிருவகிக்கும் அதற்குரிய ஆற்றலை தீர்மானிப்பதும் முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும். முகாமை தனது அதிகார சபையை மூடுவதற்கு, வேறு மாற்று வழிகள் இல்லாத நிலையில் அதன் செயல்பாட்டை நிறுத்துவதற்கு எண்ணினால் தவிர, சபை அது நிலைத்திருக்க கூடிய தன்மை அடிப்படையில் அதன் தொடர்ந்திருத்தல் மற்றும் கணக்கியல் ஆகியன பற்றிய உண்மையான விடயங்களை வெளிப்படுத்துவது அதன் பொறுப்பாகும்.

சபையின் நிதி நிலை அறிக்கையிடும் செயல்முறையின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள தரப்புகள் பொறுப்புகளை ஏற்க வேண்டும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த சபையின் வருடாந்த அறிக்கையையும் நிதிக் கூற்றுக்களையும் தயாரிக்க உதவக் கூடிய அனைத்து வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பன பற்றிய புத்தகங்களையும் மற்றும் பதிவுகளையும் முறையாகப் பேண வேண்டும்.

1.5 நிதி அறிக்கையின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக நிதி கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக தவறான கூற்றுக்கள் நீங்கியனவா என்பதற்கு நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும் எனது கருத்தை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உறுதியாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் ஒரு கணக்காய்வு, ஒரு தவறு இருக்குமாயின் அதனை எப்போதும் கண்டறியும் என்பதற்கு அது உத்தரவாதம் அளிக்காது. தவறான கூற்றுக்கள், மோசடிகள் அல்லது பிழையின் காரணமாக வரலாம். தனியாக அல்லது மொத்தமாக இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளில் அவை செல்வாக்கு செலுத்தும் என நியாயமாக எதிர்பார்க்கலாம். மேலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் எனது கணக்காய்வு முழுவதும் தொழில்முறை சார்ந்த மதிப்பீட்டை நடத்துகின்றேன். மேலும் தொழில்முறை சந்தேகத்தையும் பேணி நடக்கின்றேன். மேலும் என்னால்:

- நிதிக் கூற்றில் உள்ள தவறான அறிக்கையின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்தல், மோசடி அல்லது பிழை காரணமாக, அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சார்ந்த சான்றுகளைப் பெறுதல், மோசடி, போலியான, வேண்டுமென்றே விடுபடுதல், தவறான விளக்கங்கள் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை மீறுதல் என்பன உள்ளடங்குவதால், மோசடியின் விளைவாக ஏற்படுகின்ற தவறான அறிக்கையைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் ஒன்றை விட அதிகமாகும் என்ற விடய அம்சங்கள் கண்டறியப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன.

- சூழ்நிலைகளில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வு பற்றிய உள்ளக கட்டுப்பாடு சம்பந்தமான அறிவு பெறப்பட்டது, ஆனால், அது உள்ளகக் கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றிய கருத்தை வெளிப்படுத்த அல்ல.
- பிரயோகிக்கப்படும் கணக்கியல் கொள்கைகளின் பொருத்தம், கணக்கியல் மற்றும் மதிப்பீடுகளின் நியாயப்படுத்தல் மற்றும் சபை வழங்கிய உரிய வெளிப்படுத்தல்கள் ஆகியன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன காரணமாக சபை தொடர்ந்திருப்பதில் நியாயமான நிச்சயமற்ற தன்மை தோன்றுகின்றதா என்பதைப் பற்றிய கணக்காய்வு சான்றுகளின் பேரில் கணக்கியலுக்கான சபையின் அத்தகைய தொடர்ந்திருக்கும் தன்மையின் அடிப்படையில் பிரயோகத்தின் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. நான் ஏதேனும் நிச்சயமற்ற தன்மையை அவதானித்தால், நிதிக் கூற்றுக்களில் உள்ள அத்தகைய வெளிப்படுத்துகைகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அந்த வெளிப்படுத்துகைகள் போதுமானதாக செய்யப் படாவிட்டால், நான் எனது கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதி வரை கிடைத்திருந்த சான்றுகளின் அடிப்படையில் நான் எனது அவதானிப்புகளை மேற்கொண்டேன். எனினும், எதிர்கால நிகழ்வுகள், நிலைமைகள் அடிப்படையில் சபையின் தொடர்ந்திருக்கும் நிலை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த விளக்கங்கள், கட்டமைப்பு, அவற்றின் உள்ளடக்கம் என்பன முக்கிய கொடுக்கல்வாங்கல்களையும் நிகழ்வுகளைகளையும் தெளிவாகப் பிரதிபலிக்கின்றனவான என்பது பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது.

2. <u>ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை</u>

2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் பின்வரும் விடயங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) எனும் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், 1.2 ஆம் பந்தியில் காணப்படும் தகவல்கள் தவிர எனது கணக்காய்வின் நிமித்தம் தேவையான தகவல்களையும் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன். மேலும் முறையாக நிதி கூற்றை சபை பேணியுள்ளமை எனது சோதனைகளின் மூலம் கண்டறியப்பட்டது.

2.1.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி, சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டோடு ஒத்துப்போகின்றன.

2.1.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, இந்த அறிக்கையின் 1.2 (அ), (இ), (ஊ), (எ) வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய சிபாரிசுகள் தவிர ஏனை சிபாரிசுகள் இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2. உண்மையான விடயங்களை கண்டறிய பின்பற்றிய நடவடிக்கைகளையும் மற்றும் பெற்றுக் கொண்ட சான்றுகளையும் பொறுத்த வரையில், பின்வரும் கருத்துக்களை நான் வெளியிடுமளவுக்கு எதனையும் அவதானிக்கவில்லை.

2.2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (இ) எனும் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுகளுக்கு இணங்க, இந்த சபையின் முகாமைத்துவக் குழுவின் எந்த ஒரு உறுப்பினரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, வழக்கமான வணிகப் போக்கிற்கு வெளியே இந்த சபை சம்பந்தப்பட்டுள்ள எந்த ஒரு ஒப்பந்தத்திலும் அக்கறை கொண்டுள்ளார்.

2.2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) எனும் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, பின்வரும் அவதானிப்புகள் தவிர, எந்த ஒரு ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது சபையின் முகாமைத்துவ சபை வழங்கிய பிற பொதுவான அல்லது சிறப்பு உத்தரவுகளுக்கு இணங்காத நடைமுறைகள் உள்ளன.

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) எனும் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, பின்வரும் அவதானிப்புகள் தவிர சபையின் தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும் மற்றும் பணிகளுக்கும் இணங்காத வகையில் சபை செயற்பட்டுள்ளது.

தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்	**அவதானிப்பு**
1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை சட்டத்தின் 10 (ஏ) எனும் உப பிரிவின் பிரகாரம், நிறுவனங்களுக்கு இடையிலான விவசாய ஆராய்ச்சிக் கருத் திட்டங்களுக்கு ஒழுங்குகளை செய்வதும் மற்றும் நிதிகளை வழங்குவதும் சபையின் கரும பணியாகும்.	கடந்த ஆண்டில், 4 கருத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் கருத் திட்டங்கள் இனங்காணப்பட்டு அவற்றுக்கு நிதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) எனும் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, விவசாயக் கொள்கைக்கான சபையின் வளங்கள் வினைத்திறன் வாய்ந்ததாகவும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்ததாகவும் குறித்த கால பகுதியில் உரிய சட்டங்களுக்கு ஏற்ப கொள்வனவு செய்யப்பட்டு சிக்கனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.3. <u>ஏனைய விடயங்கள்</u>

(அ) 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதிய අෙ/17/1992/728/34 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மலேசியா, தாய்லாந்து, பிலிபைன் போன்ற நாடுகளில் வருடத்திற்கு 30 பேர்கள் என்ற வீதம் 5 வருட காலப் பகுதியினுள் 150 ஆராய்ச்சியாளர்கள் கலாநிதிப் பட்டத்தை (**PhD**) கற்பதற்கு அனுப்பப்படுதல் வேண்டும். இவர்கள், இலங்கை விவசாயத் துறையில் இன்று எதிர்நோக்குகின்ற அல்லது எதிர்காலத்தில் எதிர்நோக்கக் கூடிய கஷ்டங்களிலும் மற்றும் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்தி, தமது ஆராய்ச்சித் தலைப்புகளை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். மீளாய்வு ஆண்டாகும் போது, அந்த தீர்மானம் 5 ஆண்டுகள் கழிந்திருந்த போதிலும், கொவிட்-தொற்றுநோய் நிலவரத்தினாலும் மற்றும் நிதி சார்ந்த பிரச்சினைகளினாலும், அதன் நிமித்தம் 79 ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே அனுப்பப்பட்டனர். அந்த ஆராய்ச்சியாளர்களுக்கு மத்தியில், இலங்கை விவசாயத் துறையில் ஊக்குவிப்பு நிமித்தம் மேம்படுத்த வேண்டியது என இனங்காணப்பட்டுள்ள விவசாய பொறிமுறையும், இயற்கை விவசாய துறையின் ஆராய்ச்சித் தலைப்புகளும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது 08 உத்தியோகத்தர்களினால் மட்டுமே என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) விவசாய ஆராய்ச்சிக் கருத் திட்டங்களுக்கு நிதியளிக்குகின்ற 'தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம்' (NARP) எனும் விவசாய அமைச்சின் கீழ் வருகின்ற ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகள் விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையினால் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் என்றிருந்தும், 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கு நிறைவு செய்ய வேண்டியிருந்த 04 ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் இறுதி அறிக்கைகள்

உரிய காலப் பகுதியில் பெறப்பட்டு, மீளாய்வு ஆண்டு இறுதியிலும் கூட மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை, இயற்கை விவசாயத்தில் கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு அந்த துறையில் மேலும் ஆராய்ச்சிகளை மேம்படுத்த வேண்டிய 07 முந்துரிமை பிரிவுகளை, இலங்கையில் காணப்படும் ஆராய்ச்சி நிறுவகங்களுக்கு அறிமுகப்படுத்தி இருந்த போதிலும், இயற்கை விவசாய கொள்கையையும் மற்றும் தற்போது சந்தையில் காணப்படுகின்ற இயற்கை உணவுகளின் தரத்தையும் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு 2017 ஆம் ஆண்டு முதல் ஆராய்ச்சி நிறுவகங்கள் ஊக்குவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பங்காளதேஷ விவசாய ஆராய்ச்சி சபை, மலேசியா விவசாய ஆராய்ச்சி சபை மற்றும் இலங்கை விவசாய ஆராய்ச்சிக்கான கொள்கை சபை ஆகியவற்றுக்கு இடையில் 2011 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், விவசாயத் துறையில் உள்ள ஆலோசகர்களையும், விஞ்ஞானிகளையும் பரிமாற்றிக் கொள்ளும் திட்டத்தின் கீழ், குறுங்கால வெளிநாட்டு உத்தியோகத்தர்களை அனுப்ப 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், உரிய நாடுகளில் இருந்து சரியான பதில்கள் கிடையாததாலும் மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் நிலவியதாலும் அந்த பயிற்சிகளுக்கு உத்தியோகத்தர்களை அனுப்ப முடியவில்லை.

(உ) ஒரு மெய்நிகர் விவசாய நூலக (Virtual Library) முறைமையை தாபிப்பதற்கு கடந்த ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தாலும், திறைசேரியிலிருந்து நிதிகள் கிடையாததால் கணக்காய்வு திகதியளவிலும் குறித்த அந்த முறைமையை தாபிக்க முடியவில்லை.

(ஊ) இலங்கை விவசாய ஆராய்ச்சிக்கான கொள்கை சபை கடந்த ஆண்டுகளில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த தேசிய விருது வழங்கலுக்கான (CARP National Awards) விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு, மதிப்பீட்டுக் குழுவும் நியமிக்கப் பட்டு உரிய மதிப்பீட்டு நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டிருந்தாலும், மீளாய்வு ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவிலும் அந்த விருதுகள் வழங்கும் வைபவம் நடத்தப்படவில்லை.

டபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 இன் படி, இலங்கை விவசாய ஆராய்ச்சிக்கான கொள்கை சபையின் திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் என்பன பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

அரச துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயனுள்ள பாவனை காலத்தை மீளாய்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்த நிலையான சொத்துக்களின் செலவு 28,766,620 ரூபாவாகும். மேலும் அடுத்த நிதி ஆண்டில் உரிய சொத்துக்களில் சீராக்கல் செய்யப்படும்.

(ஆ) இலங்கை விவசாய ஆராய்ச்சிக்கான கொள்கை சபை மற்றும் சர்வதேச விவசாய வன ஆராய்ச்சி நிலையம் (ICRAP) ஆகியவற்றுக்கு இடையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த CARP-ICRAP Tree Domestication என்ற கருத் திட்டத்திற்கு JW 3904 இக்கம் உடைய ஒரு கெப் வண்டி அந்தக் கருத் திட்டத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கான தகவல் சபையில் இல்லாது இருந்தமை அரசாங்க கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி இந்த வாகனத்தை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்திற்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு 1). அதற்கமைய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றோம்.

(இ) வெளிநாட்டு பட்டப்பின்படிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் பல ஆய்வாளர்கள் வெளிநாட்டு பட்டப்பின்படிப்புகளின் போது, சபைக்கு தெரிவிக்காமல் இலங்கைக்கு வந்ததாதால் 2023/04/28 ஆம் திகதிக்கு அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு இருந்த பணத்தை அறிவிடமுடியவில்லை. அந்த நிலுவை 9,144,370.00 ரூபா தொகையாகும்.

இந்தத் தொகையை அந்த மாணவர்களிடம் இருந்து அறவிடுமாறு அவர்களின் கல்வி நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாய அமைச்சினது செயலாளரின் அனுமதியின் பிரகாரம், இந்தப் பணம் விவசாயத் திணைக்களத்தினதும் அதன் சார்பு நிறுவனங்களினதும் பல மாணவர்களிடமிருந்து தவணைக் கட்டணங்களில் அறவிடப்பட்டு சபைக்கு அனுப்பப்படுகின்றது.

(ஈ) இந்தக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக 2019.09.03 ஆம் திகதி அன்று 06 மாத காலத்திற்கு கட்டிடத் திணைக்களத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம், நிர்மாணப் பணிகள் கட்டிடத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 2020 ஆம் ஆண்டுக்கான மூலதன நிதி ஒதுக்கீடு இதற்கு ஒதுக்கப்படாததால், அந்த நிர்மாண நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் குறித்த ஒப்பந்தத்தின்படி கட்டிடத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை எமது சபையினால் செலுத்த முடியவில்லை. பலமுறை

பணம் கேட்டு அது கடிதம் அனுப்பியும், பணம் செலுத்த முடியாததால், கட்டிட நிர்மாணப் பணியை, கட்டடத் திணைக்களம் தற்காலிகமாக நிறுத்தியது.

ஒப்பந்தத்தின்படி, எஞ்சிய பணத்தை கட்டிடத் திணைக்களம் கேட்டதால், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தில், இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதமின்றி கட்டிட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள உரிய பணம் வழங்கப்பட்டது. அதற்கு இணங்க, 2023.05.02 ஆம் திகதிக்கு, ரூ.10,012,225.90 கழிவுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு 02).

மேலும், ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகை தொடர்பான நிர்மாணப் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ) 2015.01.15 ஆம் திகதி அன்று, சபையின் செயலாளர் /பணிப்பாளர், டொரிங்டன் இலங்கை வங்கி கிளையின் முகாமையாளருக்கு இந்தக் கணக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், 2323246 என்ற கணக்கு தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த ரூ. 1,232,755 நிலுவைத் தொடர்பில் இறுதி தீர்மானம் கிடைக்கப் பெறும் வரை இந்த நிலுவையை இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபைக்கு பெற்றுக் கொண்டு திறைசேரிக்கு இது வரை அனுப்பப்படவில்லை. 2022 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் இது பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஊ) விவசாய ஆராய்ச்சி பணிகளுக்காக ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கும் வழங்கப்படும் பணத்தில் இருந்து எமது சபைக்கு அறவிடப்படும் தொகை 659,131 ரூபாவாகும். இது தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்த போது, இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைக்கான சபை இதனை 459,131 ரூபாவாக குறைந்துள்ளது. மேலும், ஏனைய நிறுவனங்களிடம் அறவிடப்படும் தொகை தொடர்பாக பலமுறை கடிதம் அனுப்பியும், பதில் கிடைக்காததால், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

(எ) இந்த கொடுப்பனவுகளை அறவிடுவது பற்றிய சபையின் தீர்மானம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு 03).

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.2.3 கடந்த ஆண்டு, 4 கருத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் 2022 ஆம் ஆண்டில் புதிய கருத் திட்டங்கள் எதுவும் கிடைக்கவில்லை. மேலும் பழைய 4 கருத் திட்டங்களுக்கு பணம் வழங்கப்பட்டது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2017 ஆம் ஆண்டு அமைச்சரவை வழங்கிய அதன் தீர்மானத்தின் பிரகாரம், மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் வருடத்திற்கு தலா 30 பேர் வீதம் 05 வருடங்களில் 150 ஆராய்ச்சியாளர்கள் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். எனினும், கோவிட் தொற்றுநோய் நிலைமை நிலவியதால் 79 ஆராய்ச்சியாளர்களினால் மட்டுமே இந்த பயிற்சியை நிறைவு செய்ய முடிந்தது. இதற்காக ஆராய்ச்சியாளர்களை சிபாரிசு செய்ய

வேண்டும். அந்த ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிகள், அவர்களின் நிறுவனங்களுக்கு தேவைப்படும் பிரிவுகளின் அடிப்படையில் தலைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

(ஆ) விவசாய ஆராய்ச்சி கருத் திட்டங்களுக்கு நிதியுதவியை வழங்குகின்ற தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தின் (NARP) திட்டத்தின் 2015 முதல் 2020 வரையிலான 04 இறுதி ஆய்வு அறிக்கைகள் உரிய ஆராய்ச்சியாளர்களால் வழங்கப்படவில்லை. ஆகையால் இது பற்றி நினைவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன.

(இ) இயற்கை விவசாயத்திற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் இது தொடர்பாக 02 வேலையரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், 2020 ஆம் ஆண்டு முதல், NARP இற்கான திட்டங்களுக்கு முன்மொழிவுகளை அழைப்பதில் இயற்கை விவசாயம் தொடர்பான ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையில் உள்ள ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) 2011 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பங்களாதேஷ் விவசாய ஆராய்ச்சி சபை, மலேசிய விவசாய ஆராய்ச்சி சபை மற்றும் இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைக்கான சபை ஆகியவற்றுக்கு இடையே செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி, ஆலோசகர் பரிமாற்றத்தின் கீழ் குறுகிய கால வெளிநாட்டு பயிற்சிக்காக அலுவலர்களை அனுப்ப 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான செயல் திட்டங்களில் குறிப்பீடு செய்யப்பட்டிருந்தாலும், உரிய நாடுகளில் இருந்து பதில் கிடையாமை மற்றும் கோவிட் -19 தொற்றுநோய் சூழ்நிலை என்பவற்றின் காரணமாக, அந்த பயிற்சிகளுக்கு அலுவலர்களை அனுப்ப முடியவில்லை.

(உ) எக்ரி-நெட் ஐ நிறுவுவதற்கான ஒரு வேலையரங்கை நடத்த உத்தேசித்திருந்தாலும், கோவிட் தொற்றுநோய்களின் போது ஏற்பட்ட தடைகள், போதிய மூலதன நிதி இல்லாதிருந்தமை ஆகியவற்றினால் அந்த வேலையரங்கை நடத்த முடியவில்லை.

(ஊ) இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை 2021 ஆம் ஆண்டில் நடத்த என திட்டமிட்டிருந்த குறித்த தேசிய விருதுகள் விழாவிற்கான (இவிஆகொச தேசிய விருதுகள்) விண்ணப்பங்களை அழைத்து, மதிப்பிடும் செயல்முறையை நிறைவு செய்வதற்கு இருந்த போதிலும், திறைசேரியில் இருந்து மூலதனத்தைப் பெறுவதில் இருந்த சிரமம் காரணமாக 2022 ஆம் ஆண்டில் அதனை நடத்த முடியவில்லை.

பிரபாத் விமல் குமார
செயலாளர் / பணிப்பாளர்

சபையின் செயலாற்றுகை

- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை, தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தின் (NARP) கீழ் வரும் 45 ஆராய்ச்சி கருத் திட்டங்களை விவசாயத் திணைக்களம், தேசிய பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் (NARP-NUS) இணைந்து ஒருங்கிணைத்தது. மேலும், 05 ஆராய்ச்சி திட்டங்களுக்கு, நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டத்தின் (IIMDR) கீழ் நிதியளிக்கப்பட்டது. மேலும் அந்தந்தக் கருத் திட்டங்களில் இருந்து முன்னேற்றம் பற்றி வினவப்பட்டு, உரிய குழுக்களால் / துணைக் குழுக்களால் மதிப்பீடு செய்யப்பட்டன. அத்துடன் வருடாந்த முன்னேற்ற கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

- உரிய அமைச்சுக்களின் அதிகாரிகள் மற்றும் தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் தலைவர் ஆகியோருடன் வருடாந்த கலந்துரையாடல் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையில் நடைபெற்றது. தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் தலைவர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களில் அதிகாரிகள் மற்றும் சபையின் உறுப்பினர்கள் பங்கேற்று, நாட்டில் விவசாய ஆராய்ச்சி தொடர்பான எரியும் உணர்வுபூர்வமான பிரச்சினைகள் பற்றி விவாதித்தனர். NARS அதிகாரிகள், மனிதவளப் பற்றாக்குறை, விஞ்ஞான உபகரணங்கள் பற்றாக்குறை மற்றும் போதிய நிதி இன்மை ஆகியவை தமது நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதில் கடுமையான பிரச்சினைகளாக உள்ளன என தெரிவித்தனர்.

- இவிஆகொச திறன்கள் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், NARS அதிகாரிகளுக்கு 79 உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அவர்கள் ஆசிய நாடுகளில் உள்ள இந்தியா, பிலிப்பைன்ஸ், மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற பல்வேறு பல்கலைக் கழகங்களில் PhD அல்லது MSc பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் இணைந்துள்ளனர். இவிஆகொச நிதியளிக்கும் நிறுவனம் என்ற ரீதியில் அது மாணவர்களுக்கு நிதியுதவி அடங்கலாக தேவையான பல உதவிகளை வழங்கியுள்ளது. அவர்களில், 26 விஞ்ஞானிகள் பட்டப்பின்படிப்புப் பட்டங்களை வெற்றிகரமாக முடித்தனர். மேலும் 52 பேர் அவர்களின் படிப்பைத் தொடர்கின்றனர்.

கணக்காய்வு விசாரணைகளிலும் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக் காட்டப் பட்டுள்ள குறைபாடுகளை சீராக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

- பணத் தொகையை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து மீளறவிடுவதற்கு சபை பயனுள்ள நடைமுறைகளைப் பின்பற்றியுள்ளது. பணம் திரும்பப் பெறப்பட வேண்டியவர்கள் இப்போது இந்த நாட்டிற்கு வந்துள்ளனர்.

- விவசாய ஆராய்ச்சி கருத் திட்டங்களுக்கு நிதியை வழங்கும் தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தின் நிறைவு செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சியின் இறுதி அறிக்கைகளைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- தேசிய விருதுக்கான விண்ணப்பங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. 14 சிறந்த ஆராய்ச்சி கருத் திட்டங்கள் பெருந்தோட்டம் சாராத, பெருந்தோட்டம் சார்ந்த மற்றும் கால்நடைகள் மற்றும் மீன்பிடிகள் முதலிய துறைகளை சேர்ந்தவையாகும்.

வேண்டிய இடைக்கால நடவடிக்கைகள்

- சபையின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையை பின்பற்றுமாறு அனைத்து ஊழியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது